Registered No. M. 878.

பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதாநியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மக்ஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கிலமீ
15உயில் பிரசுரமாகி நடைபெறும்

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 3. | 1913ளு மார்ச்சுமீ 15உ
பரீதாபிளு பைங்குனிமீ 2உ | பகுதி 11.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S.
} பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

(CONTENTS.)

1. எண்ணங்களின் இரகசியம்—ப. நாராயண ஐயர். க—கூ
Thought Forms—P. Narayana Iyer

2. ஸுமதி என்னும் உத்தமியின் சரித்திரம்—எஸ். சாமிநாதையர் க—சக
Sumathi, a Tamil Novel—S. Swaminatha Iyer.

2. ஸன்மார்க்க முறையில் விதோபதேசம்—ப. நா. க—சக
Instruction to Occultists—P. Narayana Iyer.

4. தீபாவளியின் ஆராய்ச்சி—ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் க—௬எ
The Enquiry into the Deepavali Festival } R. S. Narayanasamy Iyer.

5. புத்தகவரவு—பத்திராதிபர் க—௬க
Review of Books—Editor.

6. பத்திரிகை வரவு—பத்திராதிபர். க—௪0
Review of journals—Editor.

7. சமாசாரம்—பத்திராதிபர். க—௩௩
News—Editor.

8. உதாஸீந ஸாது ஸ்தோத்ரம்—ஆர். ஸுந்தரராஜ ஐயர்
Udasina Sadhu Sthothram an Advaita work. } R. Sundararaja Iyer. Supplement.

மூன்று ஸஞ்சிகைகள் வெளியாய் விட்டன.

பக்தமாலா வசனம்.

ஸ்ரீ சாது பாலகிருஷ்ண முதலியாரால் மகாராஷ்டிர பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. இதனை வாசிப்பதினால் தெய்வ பக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலியன இருபாலர்க்கும் செவ்வனே உண்டாகும். இதில் 182 சிறந்த பக்தர்களின் சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இச் சரித்திரங்களிலுள்ள விஷயங்களை ஒவ்வொருவரும் வாசித்துத்தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இது டிமமி 8 பாரங்கொண்ட ஸஞ்சிகை வடிவமாய் 12 ஸஞ்சிகையில் முடிவுபெறும். சொற்ப காப்பிகளே அச்சடித்து வருகிறோமாகையால் வேண்டியவர்கள் உடனே எழுதிப்பெற்றுக்கொள்ளவும். 12 ஸஞ்சிகைகளும் முடிந்து ஒரே புஸ்தகமாய் அனுப்பும்பொழுது அதன் விலை வி. பி. சார்ஜ் உள்பட ரூபா 4. ஆகையால் இப்பொழுதே ஆர்டர் செய்துகொள்ளுங்கள்.

சந்தா விவரம்.

12 ஸஞ்சிகைக்கு முன்பணமாக வி. பி. சார்சு உள்பட ரூ 2—12—0
சந்தாதார்களின் சௌக்கியத்தை உத்தேசித்து இரண்டு தடவையாக வி. பி. யிலனுப்ப சந்தா } ரூ 1—7—0

Apply to:—அம்பரோஸியா ஆபீஸ்,
53, பைகராப்ஸ் ரோட், திருவல்லிக்கேணி.

ADVERTISEMENT.

அறிவிப்பு.

உயர்ந்த புத்தகங்கள்! குறைந்தவிலை!

உபநிஷத் அர்த்ததீபிகை என்னும் பெயரால் பிரசித்தம் செய்யப்பெற்ற உபநிஷத்துக்களும், ருத்ரார்த்ததீபிகை என்னும் பெயரால் வெளிவந்த வேதாந்தரூத்ரபாஷ்யம் 9 பாகங்களும், அடியிற்கண்ட குறைந்த விலைக்குச் சொற்பகாலம் விற்கப்படும். வேண்டியவர்கள் தஞ்சாவூரில் கோவிந்தன் அண்ட் பிரதர்ஸ் கம்பெனியிலிருந்தும், சென்னை தம்புசெட்டித் தெரு ரிப்பன்பிரஸ்ஸிலிருந்தும, அடியில் கையொப்பமிட்டிருக்கிறவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகங்களின் விவரம்.

இவைகளில் ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ்பாஷ்யங்களும் குறிப்புரைகளும் அடங்கியிருக்கின்றன.

	முன்விலை. ரு அ ப	இப்போதியவிலை. ரு அ ப
ஈசோபநிஷத்	1—8 —0	0—8 —0
கேநோபநிஷத்	1—12—0	0—10—0
கடம்	4—0 —0	1—8 —0
முண்டகம்	2—8 —0	1—0 —0
மாண்டூக்யம் கவுடபாதர் அவர்களுடைய காரிகையுடன் தமிழில்	3—8 —0	1—8 —0
தைத்திரீயம்	6—0 —0	2—0 —0
ருத்ரார்த்ததீபிகை 9ஸஞ்சிகை	6—12—0	2—4 —0

தபால்சார்ஜ் பிரத்யேகம்.

அ. சிவராவ்.
ரிடைர்டு டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்ட்ரார்,
61 கிர். கச்சேரி ரோட்,
மைலாப்பூர்.

NOTICE.

A Theosophical Book Depot has been opened at the *Hall of Theosophy*, *Madura* for sale of English and Tamil Theosophical books which are sold very cheap.

V. VENCUSAMI AIYAR,
Manager.
Theosophical Book Depot, Madura.

புஸ்தகம், துண்டுப் பத்திரிகைகள் விளம்பரம்.

ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil)	1-0-0
பிராசீந தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும்	0-6-0
மனிதனின் வம்சாவளியின் உண்மை	0-4-0
ஹிந்துமத தூஷண பரிகாரம்	0-4-0
Avvayar's Yoga aphorisms in English	0-4-0
கடோபநிஷத் தமிழ்மொழிபெயர்ப்பு	0-3-0
தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு	0-3-0
சுவேதாசுவதரோபநிஷத் ஷை	0-3-0
ஐதரேயோபநிஷத் ஷை	0-2-0
மௌநவாக்கு	0-2-0
சந்மார்க்கதீபம்	0-2-0
ஈசோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு	0-1-0
அந்நிபெஸண்டு அம்மையார் சரித்திரம் (செய்யுள்)	0-1-0
டில்லிதர்பார் மஹோத்ஸவம்	0-1-0
வெள்ளியம்பலம் என்னும் ஞாநிகளின்சங்கமும்அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும்	0-1-0
வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களின் சரித்திரச்சுருக்கம்	0-0-6
ஏசுகிறீஸ்து என்பார் சரிதம்	0-0-6
தேவாலயம்	0-0-3
தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும்	0-0-3
இந்தியபுத்திரர்களின் சங்கம்	0-0-3
பிரஹ்மவித்யை (ஆங்கிலத்தில்)	0-0-3
சிராத்தம்	0-0-3
சந்மார்க்க சபையை நடத்தும் முறை	0-0-3
பிரஹ்மஞாந சபையின் யந்திரம்	0-0-2
பிரஹ்மவித்யை	0-0-2
அஷ்டமி பிரதக்ஷிணம்	0-0-1
பிரமஹ்ஞாந சபை	0-0-1
தாசவதாரங்களின் உண்மை	0-0-3
மஹாத்மாக்களும், அவர்களை அடையும் மார்க்கமும்	0-0-3

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தபாற் கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் மதுரை தியஸாபிகல் ஸொஸைட்டி ப்ரெஸிடெண்டு ப. நாராயணையரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

486



நீலமேகம்.

நீலபுஷ்பம்.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 3. } 1913௵ மார்ச்சு௴ 15௳ / பரிதாபி௵ பைங்குனி௴ 2௳ } பகுதி 11.

எண்ணங்களின் இரகஸியம். *

1. எண்ணங்கள், அல்லது சிந்தனைகள் என்பன மனோவிர்த்திகளாம்; அவை மனோமய கோசத்தின் அலைகள்; அவை ரூபங்களை உடையன, வர்ணங்களை உடையன; சூக்ஷ்மமான மாநஸிகதிரவியங்களால் அமைக்கப்பெற்ற பதார்த்தங்களேயாம். எண்ணங்களின் ரூபங்களும், வர்ணங்களும் அவைகளின் தன்மைக்கும், நேர்மைக்கும் ஏற்ப வித்தியாஸப்படும். திவ்விய திருஷ்டி உள்ளவர்களுக்கு அவை புலப்படும். கோபமானவும் கொடூரமானவுமாய எண்ணங்களின் ஸ்வரூபங்களும் நிறங்களும் வெறுப்பை உண்டுபண்ணும் இயல்பின, பெரும்பாலும் ரக்தவர்ணமுடையவைகளாக இருக்கும். அன்பு, தயை, பக்தி முதலிய நன்மையான எண்ணங்கள் பிரியத்தை உண்டுபண்ணும் இயல்பின. இவை பலவகை; நீலவர்ண முள்ளவைகளாகவும், ஊதாவர்ண முள்ளவைகளாகவும், ரோஜாவர்ண முள்ளவைகளாகவும் இருக்கின்றன.

---

* Taken and abstracted, from Chapter X of "the 'Life after Death," The Riddle of life series No. 2.

2. இவைகளைப்பற்றிச் சற்று ஆராய்வோம். சாதாரணக் கண்ணுக்குப் புலப்படும் ஸ்தூலதேகமாகிய வெளியுடம்பைத்தவிர மனிதனுக்கு சூக்ஷ்மதேகமாகிய உள்ளுடம்பு ஒன்று உண்டு; அதுவே மனோமயகோசம் என வேதாந்தநூல்களில் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. அது அசுத்தமனஸ், சுத்தமனஸ் என இருவகைப்படும். முன்னது காமனைகள்பற்றியது. பின்னது காமனைகள் அற்றது. இவ்விரண்டுவகை உடம்புகளைப்பற்றி ஔவையார் அடியில்வருமாறு சொல்லியிருக்கிறார்.

> வெள்ளி பொன் மேனியது ஒக்கும்
> உள்ளுடம்பி னுய ஒளி—ஔவை குறள்.

பொன் என்பது காமனைகளை அதாவது ஆசாபாசங்களைக் குறிப்பிடும். வெள்ளி என்பது சுத்தமாயிருத்தலை, காமனைகள் அற்ற நிலைமையைக் குறிப்பிடும். எவ்வளவுக்கெவ்வளவு, விரிந்த அறிவு உள்ளதோ, அவ்வளவுக் கவ்வளவு மனோமயகோசம் நண்ணிய ஸாத்விக திரவியங்கள் அமையப்பெறும். அசுத்த மனோமய கோசத்தை பொதுப்படையாக மனோமய கோசமென்றும், சுத்த மனோமய கோசத்தை விக்ஞானமய கோசமென்றும் உபநிஷத்துக்களில் பிரஸ்தாபமுண்டு.

3. மனோமய கோசம், திவ்விய திருஷ்டியில், மிகவும் அழகானது. அதன் திரவியங்கள் சலித்துக்கொண்டிருக்கின்றமையால் அதின்கண் நாநாவிதமான வர்ணங்கள் தோன்றும். அதன்கண் ஒவ்வொரு எண்ணமும், அதற்கு ஏற்ப,ஒரு ஸ்வரூபத்தை உண்டு பண்ணும். அருவிகளின் ஜலம் நண்ணிய துளிகளாகச் சிதற அவைகளின்மேல் சூரியரஸ்மிபடும்போது, நாநாவிதமான வர்ணங்கள் அழகாய்த் தோன்றுமாறு போல், எண்ணங்களும் நாநாவிதமான, வர்ணங்களையுடையனவாகப் பிரகாசிக்கும்.ஒரு பாத்திரத்தின் ஜலம் அலையும்போது, அதன்மேல் சூரியரஸ்மி பட்டால் அவ்வலையின் பிரதிபிம்பம் சமீபத்திலுள்ள சுவரின்மேல் நாநாவிதமான ரூபங்களாக அமையுமாறுபோல, எண்ணங்களும் நாநாவித ஸ்வரூபங்களைப்பெறும். ஒவ்வொரு மனோவிர்த்திக்கும் ஓரோர் ரூபம் வியக்தப்படும். ராஜஸ தாமஸமான ஸ்தூலதிரவியங்கள் அமைந்துள்ள

மனோமயகோசத்தில், அவ்வலைகள் ஏற்படுமாயின் அழகின்றிய ரூபங்களும் அருவருப்பான வர்ணங்களும் தோன்றும். ஸாத்விகமான சூக்ஷ்மதிரவியங்கள் அமைந்துள்ள மனோமய கோசத்தில் அழகுள்ள ரூபங்களும், விருப்புள்ள வர்ணங்களும் தோன்றும். இத்தன்மையான அலைகளான விர்த்திகள், தீவ்ரமாய் ஒரு குறித்த லக்ஷ்யத்தை நோக்கி நடை பெறுமாகில் அவை பலிக்கும். வீரியமுள்ளவையாக ஏற்படும். ஒருவனுக்குபஹரிக்கவேண்டுமென அவ் விர்த்திகள் நிகழுமாகில், அப்படியே உபஹரிக்கும். ஒருவனுக்கு அபஹாரம் செய்யவேண்டுமென அவ்விர்த்திகள் நிகழுமாகில், அப்படியே அவனுக்குத் தீமை நேரிடும்.

4. அதிக காமனைகளுள்ள மநத்தின் விர்த்திகள் ஸ்தூலமான மாநவிகதிரவியங்கள் அமைந்துள்ளன அவ்விர்த்திகள் அதிக கீழ்க்கடையான அலைகளாக இருப்பின் அத்தன்மையான மநத்தின் அலைகள் மங்கிய வர்ணமுள்ளவைகளாகவும், மூக்கியமாய் அசுத்த பச்சைவர்ணம் அசுத்த சிவப்பு வர்ணம் உள்ளவைகளாகக் காணப்படும். கோபாவேசமுள்ள விர்த்திகள் ஈட்டிபோன்ற ரக்தவர்ணமான ரூபங்களைத் தோற்றுவிக்கும். மேற்கண்டவை பொதுவாய் நாகரிகமற்ற, மநத்தை அடக்க கொஞ்சமேனும் பிரயத்தநம் செய்யாத, முரட்டுஸ்வபாவமுள்ள மனிதனிடம் உண்டாகும். அறிவுபற்றிய, நாகரிகமுள்ள மனிதனின் மநோ விர்த்திகள், கூடியவரை நேர்மையான ரூபம், அழகான வர்ணம் உடையவையாகத் தோன்றும்.

5. சுருக்கமாகச் சொல்லுமிடத்து இவைகளின் தர்மம் அடியில் வருமாறு:—

(1) எண்ணங்களின் தன்மை (அதாவது கீழான விருப்பங்கள், மேலான விருப்பங்கள் உள்ள தன்மை) வர்ணத்தைக் குறிப்பிடும்.

(2) மேலான உயர்நலமுள்ள எண்ணம், சுயநலம் பாராட்டாத எண்ணம் அவற்றின் ஸ்வரூபத்தைக் குறிப்பிடும்.

(3) வியக்தமான தீவ்ரமான ஐயமற்ற எண்ணம் அவ்வர்ணம், அச்சொரூபம் இவைகளை வியக்தமாகத்தோன்றும்படி செய்திடும்.

எண்ணங்களின் வர்ணம்.

6. சுத்தமாத்திலும் அசுத்தமநத்திலும், பக்திரஸத்தில் தோய்ந்த விர்த்திகள் ஏற்பட்டால், நீலவர்ணமுள்ள காட்சி தோன்றும். தேவாலயங்களில், பூஜாகாலங்களில் அநேகர் கூடி, ஆராதிக்குங்காலத்தில் சூக்ஷ்ம பூமிகளில் இத்தன்மையான நீலவர்ணமுள்ள மேகக்குவியல்களைக் காணலாம்* பொது ஜநக்கூட்டமாக இருக்கிறபடியால் இவைகள் வியக்தமாக ஸ்வரூபப்படா.காமனைகள் உள்ள பலஜநங்கள் கூடுகின்றமையால், கீழ்க்கடையான அசுத்த பச்சை முதலிய வர்ணங்களும் நீலவர்ண தோற்றத்தின் ஊடே ஊடே எதிர்ப்படுகின்றன. உண்மையான ஈசுவரபக்தியுள்ள நிர்மலமான ஆகாசத்தில் பிரகாசிக்கின்ற விர்த்திகள் அழகான நீலவர்ணமான மேகக்குவியல்கள் போல் தோன்றும். பிரகாசமான நீலவர்ணமுள்ள இம்மேகக் குவியல்களின் ஊடே, ஸ்வர்ணச்சாயையுடன் ஜ்வலிக்கின்ற சுடர்கள் காணப்படும். சிலசமயங்களில் சுடர்கள் பொறிகள் கூட்டங் கூட்டமாக மேல்நோக்கி அம்புகள் எய்தாற்போலக் காணப்படும்.

7. கோப விர்த்தி ஏற்பட்டால் பல சாயையான சிவப்புவர்ணங்கள் மநோமயகோசத்தில் தோன்றிடும். கீழ்க்கடையான முரட்டுத்தனமான கோபமானது இருண்ட சிவப்பு வர்ணமானதும் கறுமைவர்ணமானதுமான அருவருப்பை உண்டுபண்ணக்கூடிய மேகம் போன்ற உருவம் தோன்றிடும். அநீதிகளைச் சகிக்காது எழும் உயர் நலபாவமுள்ள கோபம் ஏற்படில் பிரகாசமுள்ள சுத்த சிவப்பு நிறமுள்ளவையாக அக்கோபமேகங்கள் ஏற்படும். அதை திவ்யதிருஷ்டியால் பார்க்கின்றவர்களுக்கு அப்ரியமான ஒரு திகைப்பையுண்டுபண்ணினும் சுத்தமாய் அருவருப்பை யுண்டுபண்ணக்கூடியவையல்ல.

8. அன்பு ப்ரியம் முதலியவைகளுக்கு நாநாவித சாயையுள்ள ரோஜாவர்ணமமைந்த மேகங்கள் ஏற்படும், மேற்கூறிய

---

* முதல் படத்தைப் பார்க்க.

அன்பு அல்லது பிரியம் விஷய சுகத்தை நாடியதாக விருக்குமாகில் மங்கிய சிவந்த நிறமுள்ளவையாக அம்மேகங்கள் தோன்றும். அவ்வன்பு சுயநலம்பாராட்டியதாக விருக்குமாகில் கபில வர்ணங் கலந்த சிவந்த ரோஜாவர்ணமாக அம்மேகங்கள் காணும். மேற் கூறிய அன்பு பொறாமைபற்றியதாக விருப்பின் மங்கலான பச்சை வர்ணம் கலந்த ரோஜாவர்ண முள்ளவையாக அம்மேகங்கள் தோன்றிடும். அன்பானது வரவரத்தூய்மை பெற்று ஸத்வமாகி சுயநலம் குன்றிடவும் மேன்மேலும் அகன்ற பரோபகார சிந்தனை யும் பிறர்பால் உயர்நலமமைந்த எண்ணமும் அகன்றுகொண்டே வர அத்தன்மையான மனோநிலையில் மென்மேலும் பிரியப்படக் கூடிய திவ்யலாவண்யமான ரோஜா வர்ணமுள்ள மேகங்கள் தோன்றும்.

9. விக்ஞானப்பயிற்சி, மஞ்சள் வர்ணமுள்ள ரூபங்களை மனோமயகோசத்தில் தோன்றிடச் செய்யும். விக்ஞானப்பயிற்சி ஞானமுறைபற்றியதாகவும் சுத்த ஸத்வகுணம் பற்றியதாகவும் நிக முமாகில் விக்ஞானமயகோசத்தில் உண்டாகும் அலைகள் மெல்லிய மஞ்சள் வர்ணமுள்ளவைகளாகவும் மிகவும் அழகுள்ளவைகளாக வும் தோன்றும். சொந்தலாபத்தைக்கருதிய பேராசையுள்ள மனோ விர்த்திகள் எவ்வளவு விக்ஞானப் பயிற்சியுடன் கூடியிருந்தாலும் அவைகளினிடம் செம்புபோன்ற (Orange) வர்ணமுடைய அலை கள் உண்டாகும்.

எண்ணங்களின் ரூபம்.

10. எண்ணங்களின் ரூபம் அவைகளின் உயர்வு தாழ்வைப் பற்றி வேற்றுமைப்படும். ஈசுவர பக்தியுள்ள சிந்தனைகளில் அழகானபுஷ்பம் போன்ற உருவங்கள் தோன்றிடும். நீலவர்ண முள்ள தாமரை மொட்டுப்போல சில சமயத்தில் அவ்வுருவங்கள் தோன்றும். அந்நிலையில் பக்தி சிந்தனைகொண்டவன் தன்னை முற் றும் மறந்து தன்னை முற்றும் துறந்தவனாய்த் தன்னை மதிப்பான். பக்தர்கள் நாநாவிதமான படிகளிலிருக்கின்றார்களாகையால் அந்தந்த நிலைக்கேற்ப பலவிதமான வர்ணங்களும் பலவிதமான ரூபங்களும் உள்ள புஷ்பங்களின் காட்சிதோன்றிடும். மேற்படி புஷ்பங்களின்

இதழ்கள் பலசாலைகளமைந்த நீலவர்ணமுள்ளவைகளாக மேல் நோக்கி இருப்பனவாகும். * இவ்விதமாக மநத்தில் அன்புடன் ஆராதனை சிந்தனைகள் ஈசுவரனைப்பற்றி நிகழ்வதில் நாநாவிதமான ரூபங்களும் வர்ணங்களு மமைந்த புஷ்பக்காட்சிகள் திவ்விய திருஷ்டியில் தோன்றுகின்றமையை அநுஸரித்து பக்தர்கள் பஹிர்முகமாய் ஆராதனைசெய்யுங்காலத்தில் நாநாவித ரூபம், வர்ணம் அமைந்த புஷ்பங்களை உபயோகிக்க நேர்ந்திருக்கின்றது என்பதாக நினைக்கக்கூடியதாக விருக்கிறது. காட்சியில் பிரகாசமான சுத்த வெண்மையான புஷ்பம் தோன்றுதல் அந்தர்முகப்பட்ட ஆராதனை ஸாத்விகமாக இருத்தலைக் குறிப்பிடும். பஹிர்முக ஆராதனை பரமசிவனை உத்தேசித்து ஞானம் பெறவேண்டிநிகழ்ந்தால் வெள்ளைப்புஷ்பங்களை உபயோகிக்கின்றார்கள். அவ்வாராதனை உலக சம்பந்தப்படகாமனைகள்பற்றியதாகவும் ஈசுவரியை நோக்கியதாகவும் நிகழ்ந்தால் பலவர்ணமுள்ள சிவப்புப் புஷ்பங்கள் அந்தர்முகதிருஷ்டியில் தோன்ற, பகிர்முகாராதனையில் அத்தன்மையான புஷ்பங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன, ஐந்துகோணமும் நீலவர்ணமும் அமைந்த நக்ஷத்திரத்தைப்போன்று ஈசுவரனைநோக்கி சிந்தனையானது சில சில சமயங்களில் ஏற்படுகிறது. இவ்விதமாக, வட்டம், கனச்சதுரம், கூர்நுனிக்கோபுரம் (Pyramid), முக்கோணம், பஞ்சகோணம் அறுகோணம்இவைபோன்ற ரூபங்களை எண்ணங்கள் அமையப் பெறும். இவை பிரபஞ்சத்தின் நேர்மையான அமைப்பையும் தத்வவிஷயங்களின் ஆராய்ச்சியையும் பற்றிய சிந்தனைகளைக்குறிப்பிடும். எண்ணங்களின் நக்ஷத்திர ரூபமான வடிவம் மஞ்சள் வர்ணமுள்ளவைகளாகவிருப்பின், பிரபஞ்ச அமைப்பின் நேர்மையைப்பற்றிய ஆராய்ச்சியின் சிந்தனை நிகழ்கின்ற தென்பதைத் தெரிவிக்கும்.

11. எண்ணங்களின் வர்ணம் ரூபம் வியக்தமாய் ஏற்படல்:— ஐயமற, வியக்தமாய் சிந்தனைகள் ஏற்படுமாகில், ரூபங்கள் வர்ணங்களும் கலப்பில்லாமல் வியக்தப்படும். முன்னர் பல எண்ணங்களுண்டாகின்றமையைப்பற்றிப் பிரஸ்தாபிக்குங்காலையில் மேகங்கள், மேகக்

* இரண்டாம் படத்தைப்பார்க்க.

குமிபல்கள் என்று பதங்கள் உபயோகிக்கப்பட்டன. அதற்குக் காரணம் என்னவென்றால், சாதாரண ஜநங்களின் எண்ணங்கள் ஐயமறத்தெளிவாய் இராமலும், வியக்தப்படாமலும் குழப்பமுள்ளவைகளாகவு மிருக்கின்றமையால் அப்பதங்கள் உபயோகப்படுத்தப்பட்டன.

12. நாம் யாரேனும் ஒருவரை நோக்கி அவருக்கு நலமுண்டாகவேண்டுமென்று தீவ்ரமான சிந்தனைகொள்ளுவோமாகில் அவ்விதமே அவர்களுக்குச் சுகிர்தத்தைச் செய்வோம். நமது சிந்தனை அலையாக வெளிக்கிளம்பி அவரது மனோமயகோசத்தைத் தாக்கித் தீங்கு வராமல் ஒரு கவசம்போல் அவரை ஆதரித்துச் சுகிர்தத்தையுண்டுபண்ணுதற்கு சமயங்களை எதிர்நோக்கி இருக்கும். அச்சிந்தனை அநுகூலமாயிருக்கின்ற சக்திகளை எழுப்பியும், பிரதிகூலமானசக்திகளைச் சோர்வடையும்படியும் செய்திடும். இவ்விதம் தாயானவள் தூரதேசத்திலுள்ள தன்குழந்தையை நோக்கி அன்பும் ஆதரவுமுள்ள சிந்தனைகளைக் கொள்ளுவாளாகில் அச்சிந்தனைகள் அக்குழந்தைகளைச்சுற்றிச் சுற்றி சுகிர்தம் செய்ய நிகழ்ந்துகொண்டிருக்கும்.

13. நல்ல எண்ணங்களால் இவ்விதமே பிறருக்கும் பொதுப்படையாய் ஜநஸமூகத்துக்கும் சுகிர்தத்தை உண்டுபண்ணக்கூடும். மஹா புருஷர்கள் இவ்விதமே உலகத்தின் ரக்ஷணார்த்தமாக நல்ல சிந்தனைகளைச்சிந்தித்து சுகிர்தம் பயக்குகின்றார்கள். எப்போதும் தீய சிந்தனைகளை ஒழித்தலும் நல்லசிந்தனைகளைக் கொள்ளுதலும் நலமாம்.

"நன்றே நினைமின் நமனில்லை" என்றார் திருமூலரும்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு ஊரிலும் தர்மசிந்தனையுள்ள பெரியோர் முறையாக தினந்தோறும் குறிப்பிட்டகாலத்திலும் குறிப்பிட்ட இடத்திலும் கூடி பொது ஜந க்ஷேமங்களின் பொருட்டு உண்மையான சிரத்தை பக்தியுடனே நற்சிந்தனை கொண்டு ஈசுவர ஆராதனை முதலியவை நியமமாகச் செய்வார்களேயாகில் அந்தந்தக் கிராமத்திற்கும் அந்தந்த ஊருக்கும் எல்லா நலமு

முண்டாகும். எல்லாத்தீய நோய்களும் அவைகளை விட்டகன்றிடும். இக்காரணம்பற்றியன்றோ இந்த பிரஹ்மாண்டத்தின் அதிபதியாகிய ஈசுவரனின் ஸ்தூலசரீரமாகிய சூர்யனை பொதுஜந நலத்தின் பொருட்டு பிராஹ்மணர்கள் சூர்யஉதயத்தில் விதிமுறைப்படி ஆருணமந்த்ரத்தை ஜபித்து சூர்ய நமஸ்காரம்செய்து வரவேண்டுமென ஓராக்ஞை இன்னும் வழக்கத்தில் இருக்கிறதென்று சொல்லலாய்?

14. இக்காலத்தில் இவ்வநுஷ்டாநம் முன்போல் சரியாய் நடக்கவில்லையென்று நாம் அறிவோம். அதனால்தான் மழைகுன்றிப் பஞ்சம் ஏற்படுதலும் புதிய புதிய வியாதிகள் தோன்றுதலும் சம்பவித்திருக்கின்றன. ஜநங்களுக்கு சுகிர்தம் உண்டாகும் பொருட்டே தேவாலயங்கள் தோறும் நிநம் ஒருமுறை இருமுறை மும்முறை அறுமுறை பூஜைகள் ஏற்பட்டுள்ளன. உண்மையான அன்புடன் விதிமுறை வழுவாது அப்பூஜைகள் நடைபெறுமாயின் நம் தேசம் நலம் பெறுமன்றோ?

இக்காரணம் பற்றியே ஒவ்வொரு மனிதனும் தான் படுக்கையைவிட்டு எழுந்தவுடன் "ஸமஸ்தா ஜநா: ஸுகிநோ பவந்து" எல்லா ஜநங்களும் சுகம் பெறட்டும் என நல்ல சிந்தனை செய்யவேண்டுமென விதியும் ஏற்பட்டுள்ளது. இதுபற்றியன்றோ ஞாநஸம்பந்தப் பெருமானும் அடியில் வரும் பாசுரத்தை உதயராகத்திலும் அமையும்படி செய்துள்ளார்? எல்லாரும் உதயகாலத்தில் இந்தப்பாசுரத்தை சிரத்தையுடன் சிந்திப்பாராகில் உலகத்திற்கு க்ஷேமம் உண்டாகும்.

"வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

ப. நா.

சுமதி என்னும் உத்தமியின் சரித்திரம்.

(222-ம் பக்கத் தொடர்ச்சி.)

சத்திரம் போய்ச்சேர்ந்து வண்டியைவிட்டுக் கீழே இறங்கினதும் சுமதி தன் விருத்தாந்தத்தை ஆதியோடந்தம் தன்னுடன் பிரயாணஞ் செய்தவர்களுக்குத் தெரிவித்தனள். அவர்களும் அவ்வநாதையின்மீது அநுதாபங்கொண்டு தங்கள் பெண்ணைப்போலவே அன்புடன் நடத்திவந்தார்கள். சுமதியும் அக்குடும்பத்திலுள்ள எல்லோருக்கும் கண்ணுக்குக் கண்ணாய் நடந்துவந்தனள். அவர்கள் பல க்ஷேத்திரங்கள் தரிசனஞ் செய்துகொண்டு பல புண்ணியதுறைகளாடிச் சின்னாட்களில் ஊர்போய்ச் சேர்ந்தனர்.

சுமதி எத்தனை சௌக்கியத்திலிருந்த போதிலும் தமயனைப் பற்றி நினைந்து நினைந்து நெஞ்சுருகினள். அக்குடும்பத்தாரும் அவளுக்குவேண்டிய தைரியம் சொல்லித் தேற்றிவந்தனர். அக்குடும்பம் கௌரவமான குடும்பமானதால் கல்வியும் நாகரிகமும் நிரம்பியிருந்தது. வீட்டுவேலை முடிந்த பின்னர் பிற்பகல் நேரத்தில் அக்குடும்பப் பெண்களெல்லாம் ஒன்றுகூடிப் பலவிதம் பொழுது போக்குவார்கள்.

சிறிதுபொழுது ஸ்ரீமத் இராமாயண பாரத இதிகாசங்களையும் புராணங்களையும் வாசித்துப் பொழுது போக்குவார்கள். வீணை முதலிய இன்னோசை வாத்தியங்களிற் பயின்று மனங்களிப்பார்கள் அங்குள்ள சிறுமிகள். அதனைக்கேட்டு முதியோர்கள் ஆனந்திப்பார்கள். சில சமயங்களிற் சிறுமிகள் பாடிக்கொண்டே சரிகை வேலைகள் செய்தல், பூப்போடல், ரத்ந கம்பளங்கள் நெய்தல் முதலிய உபயோகமான கைத்தொழில்கள் செய்வதிலும் தந்தத்தில் நுட்ப வேலைப்பாடுகள் செய்வதிலும் காலத்தைக் கழிப்பார்கள். ஒருங்கு கூடியோ தனித்தோ ஒவ்வொருவரும் காலத்தை உபயோகமான விஷயத்திற் செலவிடுவார்களே ஒழிய வீண் வம்பு வார்த்தைகள் பேசிக் காலத்தைப் போக்கார்கள். அரைத்தல், திரித்தல் முதலிய குடும்பத்துக்குரிய வேலைகளைச் செய்யுங் காலத்திலும் அருந்ததி, அநசூயை, சுகன்யை, லோபாமுத்திரை, மைத்திரேயி, கார்க்கி முதலிய புண்யவதிகளின் சரித்திரங்களையும் சாவித்திரி, தமயந்தி,

மதயந்தி, சீதை, துரோபதை, ருக்மிணி முதலிய உத்தமிகளுடைய சரித்திரங்களையும் பாடிக்கொண்டே செய்வார்கள். உபயோகமில்லாத வம்பு வார்த்தைகளை ஒருநாளும் பேசியறியார்கள். அக்கம் பக்கத்து வீடுகளில் நடக்கும் சங்கதிகளைப்பற்றி அவதூறுகள் பேசும்படியான துர்வழக்கத்தை அவர்கள் சிறிதும் அறியார்கள். தீர் எண்ணத்தை யுண்டுபண்ணக் கூடியதும் புத்தியைக் கெடுக்கக் கூடியதுமான வீண் கதையை மனத்தினாலும் நினையார்கள். அம்மாதிரியான கதைப் புஸ்தகங்களை எவரேனும் கொணர்ந்தாலும் அவற்றைக் கையாலும் தொடார்கள், உயர்ந்த புத்தகங்களிலும் உத்தம கதைகளிலுமே அவர்கள் நோக்கமெல்லாம் செல்லும். பின்னிக்கொள்ளும் பொழுதும் தலைவாரிக்கொள்ளும் பொழுதும் தோழிகள் ஒருவருக்கொருவர் பாட்டுச்சொல்லிக் கொடுத்துக்கொண்டும் அவைகளைக் கேட்டுப் பாடஞ்செய்து கொண்டும் இன்பமாய்ப் பொழுதுபோக்குவார்கள். புத்தி கூர்மையை விருத்தி செய்யத்தக்க பன்னாங்குழி, சொக்கட்டான் முதலிய விளையாட்டுகளை மிக்க யோசனையோடு விளையாடிக் களிப்பார்கள்.

அந்தோ! அவ்விதமான நல்ல வழக்கங்களெல்லாம் நம் குடும்பங்களில் அடியோடே அற்றுப்போய் வருகின்றதை நோக்குங்கால் அம்மம்ம! நெஞ்சு திடுக்கின்றது. அந்நியநாட்டுத் துர்வழக்கங்களெல்லாம் நம் குடும்பங்களில் தாராளமாய் நுழைந்து குடும்ப க்ஷேமத்தைக் குலைத்து வருகின்றன. பரோபகார சிந்தையும், குடும்ப ஐக்கியமும், உயர்நல எண்ணங்களும் இருந்த இடங்களில் சுயநலமும், கலகங்களும், இழிவான எண்ணங்களும் தலையெடுத்து அவ்வுத்தம ஒழுக்கங்களையெல்லாம் வேர்ப்பிடுங்காய்ப் பிடுங்கியெறியத் தலைப்பட்டுப் போலி நாகரிகத்தைப் புகுத்திவிட்டன. பிறருக்கென்று வாழ்ந்துவந்த குடும்பங்களெல்லாம் தனக்கென்று வாழும்படியான காலம் வந்து நலைப்பட்டுக் குடும்ப க்ஷேமங்களையும் குடும்ப சுகங்களையும் தொலைக்கத் தொடங்கி விட்டன. அன்பென்பதே அடியோடே அற்றுப்போய்விட்டது. பந்துப்பிரியம் என்பது பஞ்சாய்ப் பறந்து போயிற்று. உத்தம குணங்களெல்லாம் ஓட்டம் பிடித்தன. மானம் என்பது மடியத் தலைப்பட்டு விட்டது. ஆசாரங்களெல்லாம் அழியத் தலைப்பட்டன. விருந்தோம்பலோ

இருந்த இடம் தெரியவில்லை. சுசி ருசியென்பது சூக்ஷ்மமாய்விட்டது. பரோபகாரம் பாழ்ந்துப்போயிற்று. அந்தோ! இவ்வாறாகவா நம் குடும்ப நலங்கள் எல்லாம் குலைந்துபோகவேண்டும்! உலகமெல்லாம் ஏத்திப் போற்றத்தக்க நம் உயர் நலங்களெல்லாம் இவ்விதமாகவா ஒழியவேண்டும்!

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே" என்று

பெரியோர் கூறிய கட்டளையை இவ்விதமாகவா பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்? நன்மையைக் கடைப்பிடித்துத் தீவினையையகற்ற வேண்டுவதன்றோ நம்கடமை? அவ்வாறு செய்யாமல் நம் நாட்டு நன்மைகளை யகற்றி அயல்நாட்டுத் தீவினைகளைக் கடைப்பிடித்துத் தலைகீழ்ப்பாடம் படிக்கத் தொடங்கிவிட்டோம். ஆடவர்களே இவ்வளர்த்தத்துக்கு முக்கியகாரணமாவாரே யொழிய நம் மகளிரைக் குறைகூற இடமில்லை. நீர் வழிப்பட்டதன்றோ புணையும்.

இவ்வாறான கேடுகள் சிறிதுமின்றி வாழ்ந்த உத்தம குடும்பத்தில் சேதியரசன் அரண்மனையில் தமயந்தி வாழ்ந்து வந்த விதம் வாழ்ந்து வந்தனள் நம் சுமதியும்.

ஒருநாள் வழக்கம்போல் பிற்பகலில் ஒரு சிறுமி இனிய குரலுடன் இராமாயணம் சுந்தரகாண்டத்தில் சீதாதேவி சிறையிருந்த அசோகவன வர்ணனையை வாசிக்கவே சுமதிக்குத்தானும் தன் தமயனும் வாழ்ந்துவந்த வனத்தின் ஞாபகம் வந்துவிட்டது. அவளையறியாது அவள் கண்களில் நீர்த்துளிகள் வழிந்துகொண்டிருந்தன. தமயன் ஞாபகம் அவள் மனம் விட்டு அகலவில்லை. அச்சமயம் ஹநுமான் சீதாபிராட்டிக்குக் கணையாழி கொடுத்த கட்டம் வாசிக்கக் கேட்ட சுமதிக்குச் சிறிது ஆறுதலுண்டாயிற்று. "இராமாயணக் கதை இன்பம் அதைக் கேட்டிடில் அகன்றிடும் துன்பம்" என்று பெரியோர் கூறியிருப்பது பொய்க்குமா? தனக்கும் தமயனைக் கண்டு சந்தோஷப்படும்படியான காலம் கிட்டுமென்று சுமதிக்குச் சிறிது நம்பிக்கை பிறந்தது.

இஃது இவ்வாறிருக்க, வேட்டைக்குச் சென்ற கோபிநாதன் கதி என்ன ஆயிற்று என்று பார்ப்போம். மானைத் துரத்திக் கொண்டுபோன கோபிநாதன் பள்ளத்தாக்கில் வெகுதூரம் சென்று கடைசியாய் மானைச் சமீபித்துக் குறிவைத்து ஓர் அம்பு எய்யவே அதுவும் மாரீசனைப்போல் அலறிக்கொண்டு கீழேவிழுந்து இறந்தது. விழுந்த மானின் குரலைக்கேட்டு அங்கு குடிசைகட்டி வாசஞ்செய்து வந்த சில வனவேடர்கள் அவ்விடத்திற்கு ஓடிவந்தார்கள். கோபிநாதன் வில்லுங்கையுமாய் ஆவலுடன் மானைநோக்கி ஓடிவருவதைக் கண்ணுற்று அவன் வீரத்தை மெச்சி வந்தவன் தன்னைச் சென்னி மண்ணுற வணங்கி யெழுந்து கைகட்டி வாய்புதைத்து நின்றார்கள். கோபிநாதன் அவர்களின் தலைவனை நோக்கி நீங்கள் யாரென்று வினவ அவ்வேடர் தலைவனும் பின்வருமாறு பேசத்தொடங்கினான்.

“சாமி! நாங்க இங்கனே இருப்பவக. பொல்லாப்பயமான் எங்களை கொம்பநாளா எச்சுக்கிட்டு வந்தது. தெனம் தெனம் இந்தப் பாதை தாம் போகும். எத்தனை தொலை தொரத்திக்கிட்டுப் போனாலும் எச்சூட்டு ஓடிருங்க. அந்தா அந்தப் பய காடன் அத்தோடே பட்டபாடு என்னங்கிறீங்க. கருப்பண்ண சாமிக்குத்தாந் தெரியும். கண்ணானை சொல்றேங்க சாமி. அந்தப்பயலுக்கி தாவுதிந்து போச்சு. மொழங்காச் செல்லி பேந்துபோச்சுங்க. பொல்லாப்பயமான் சாமி. நல்லவேளை இன்னிக்கி ஆப்பட்டுக்கிச்சு. நெண்டுமூண்டு நாளா லக்குவச்சு லக்குவச்சு தப்பிச்சூட்டுது சாமி அதிட்டத்தினால் ஆப்பட்டுக்கிச்சு. வேணுமெண்டா அதே உரிச்சுத்தாரோம். தோலே ஒங்களுக்கே தந்துடுரோம். இறச்சியெ சுட்டுத்தாரோம். உங்களுக்கு வேண்டித்தே எடுத்துப்போங்க. மிச்சத்தே நாங்க எடுத்துப்போரோம். அந்தப் பிடாரிப்பய நன்னாச்சுட்டு வளக்கப்பட்டவங்க. பக்குவமாச் சுடுவான். நெண்டுமூண்டு நாளா வேட்டை பொண்ணும் கிடக்கலே. நாக்குச் செத்துப்போச்சுங்க. உரிக்கச் சொல்லட்டா? அடே பலே. கொம்பேரி மூக்கா. தீப்போட்றா பலே. சாமி பசிச்சிருக்காங்கோ. வளவிக்கு ஓடி சாமிக்குக் கொஞ்சம் தேனும் தெனைமாவும் கொண்டுகிட்டு ஓரேபாச்சலா ஓடியாரோணும் பாத்துக்கோ. திம்மா! அந்த சொரக்குடுக்கே எடுத்துக்கிட்டு ஓடி அந்த ஓடைக்குப்போய் தண்ணி கொண்டுகிட்டுவா. அடே!

பொம்மா! அந்த மரத்தாண்டை இரிக்கிர செத்தையெல்லாம் ஒதுக்கிடா பலே. சாமி களைச்சுப்போயிருக்காங்க. செத்தேப் படுத்துக்கிட்டும். சாமி கொஞ்சம் படுத்துக்கிடங்க. அல்லாம் செத்த நேரத்திலே முடிஞ்சுடுங்க" என்று சொல்லவே கோபிநாதனும் அவர்களது அந்தரங்க அன்பை வியந்து மரத்தண்டை சென்று சற்று இளைப்பாறினான். அதற்குள் கொம்பேறி மூக்கன் குடிசைக்குப்போய் தினைமாவும் தேனும் எடுத்துக்கொண்டு குடல் தெறிக்க ஓடிவந்து கோபிநாதன் முன் வைத்தான். உடனே கோபிநாதன் நிம்மன் கொணர்ந்த தண்ணீரால் கைகால்களைக் கழுவித் துடைத்துக்கொண்டு மூங்கிற் குழாய் நிறைய இருந்த தேனிற் சொற்பம் விட்டு தேக்கிலையில் வைக்கப்பட்ட தினைமாவைப் பிசைந்து இரண்டொரு கவளம் உண்டு களை தீர்ந்தான். தானே ஓடைக்குச் சென்று இரண்டொருகை நீர் அள்ளிக்குடித்து மரத்தடியில் வந்து படுத்தான். உடனே அவனுக்குச் சுமதியின் ஞாபகம் வந்துவிட்டது. "ஆ! ஆ! களைப்பின் மிகுதி சுமதியின் ஞாபகங்கூட இல்லாமற் போய்விட்டதே. அவள் எவ்வாறு தவிக்கின்றாளோ. சூரியனும் மலைவாயில் விழப்போகிறான். அவள் தனியே எவ்வாறு அவஸ்தைப்படுகின்றாளோ தெரியவில்லை. ஆகையால் உடனே போகவேண்டும் என்று புறப்படவே அதற்குள் அவ்வேடரும் தோல்வேறு மாம்சம் வேறு செய்து தோலைச் சுருட்டிக்கட்டி மாம்ச துண்டங்களையும் சுட்டுக் கொணர்ந்தார்கள். கோபிநாதனும் சுட்ட இறைச்சியிற் சொற்பம் எடுத்துத் தேக்கிலையிற் சுற்றி எடுத்துக்கொண்டு தோலையும் தோளில் வைத்துக்கொண்டு பள்ளத்தாக்கினின்றும் பரபரப்பாய் வெளியேறி வேடர்களிடம் விடைபெற்றுச் சென்றான். சுமதியைத் தான் விட்டி இடத்திற்கு வந்துபார்க்கவே அவளைக் காணவில்லை. சிறிது நேரம் பக்கத்திலுள்ள இடங்களில் தேடிப்பார்த்தான். எப்பக்கத்திலும் அவளைக்காணவில்லை. ஓகோ! மோசம் வந்துவிட்டதே என்று திடுக்கிட்டுச் சுமதி! சுமதி!! என்று பலமுறை கூவினான். ஏனென்று கேட்பார் யாவருமில்லை. ஐயோ! வேட்டையாசையால் என் அருமைத் தங்கையைத் தனியே விட்டுப் போனேனே. ஆபத்துக்கிடமாயிற்றே. குழந்தை எங்கே போனாளோ, வனவிலங்கு ஏதாவது துரத்தி அதனால் ஆபத்துக்குள்ளாகி இறந்து

விட்டாளோ. அல்லது நெடுநேரம் காத்திருந்து நான் வராததினால் வீட்டுக்குத் தனியே போய்விட்டாளோ. அல்லது இந்நிர்மாநுஷ்யமான காட்டில் எங்கேயாவது வழிதப்பிப்போய் துஷ்டர் கையில் அகப்பட்டுத் தவிக்கின்றாளோ. பொழுதும் போய்விட்டதே. வீட்டுக்குப் போய்ப் பார்ப்போம்" என்று வேகமாய் வீடு நோக்கிச் சென்றான். அங்கேயும் சுமதியைக் காணவில்லை. பக்கத்திலுள்ள உத்தியானவனத்திலுள்ள லதாக்கிருகத்தில் போய்த்தேடினான், அங்கும் காணவில்லை. திகைப்பூடு மிதித்தவன்போல் நாலா பக்கமும் சுற்றிச் சுற்றி வந்தான். சுமதியைக் காணாமல் அவன் மனம் ஆற்றொணாத் துயரையடைந்தது. அவன் பின்வருமாறு வாய்விட்டலறத் தொடங்கினான் "அந்தோ! தெய்வமே! அநியாயமாய் ஓர் அரிணைத்துக்காசைப்பட்டு அல்லற் பட்டேனே. என் கண்மணி சுமதி எங்குற்றாளோ? எவ்வாறு ஏக்கங்கொண்டிருக்கிறாளோ? தந்தையும் தாயும் நானே என்று தஞ்சமாயிருந்தவந்தாளே? ஈசுவரா! நான் என்ன செய்வேன். அவள் பேதையாயிற்றே. பிறரிடம் வாயைத்திறந்து தாராளமாய்ப் பேசாளே. நாற்குணமும் நாற்படையாக் கொண்டவளானாலும் லோகத்தில் பழகினவள் அல்லளே. அம்மம்மா! அவள் எனக்கு அன்புடன் செய்யும் பணிவிடைகளை நினைக்க நினைக்க நெஞ்சத்தைப் பிளக்கின்றதே. அவள் வீட்டைக் கண்ணாடிபோல் பளபளப்பாகவும் சுசி ருசியாகவும் வைத்துக்கொள்ளும் அழகு ஒன்றே போதுமே. மாங்குயில்போல் தீங்குரலெடுத்துப் பாடி என் மனத்தை மகிழ்வித்து என் சிரமத்தை எல்லாம் போக்குவாளே. அம்மா! சுமதி! உன் மனம் எப்படி தத்தளிக்கின்றதோ அறியேனே நேரமும் ஆய்விட்டதே. இன்னும் எங்கே போய்த்தேடுவேன். அன்னைநீ அப்பனீ ஆருயிரும் நீ என்று அடிக்கடி அன்பான மொழிகளைக் கூறி ஆனந்தப்படுத்துவாளே. ஆ! ஆ!! தெய்வமே! என் சுமதிக்கு நீரே துணை. "திக்கற்றவருக்குத் தெய்வமே துணை என்பது உண்மையாயிற்று" என்று புலம்பிக்கொண்டிருந்தான்.

(இன்னும் வரும்.)

எஸ். சாமிநாதையர்.

ஸத்மார்க்க முறையில் கீதோபதேசம்.

(31 -ம் பக்கத் தொடர்ச்சி:)

அப்போது தான் தூய்மைபெற்றதாய் மநம் உண்மையை அறிகிறது, ஈசுவரனும் தானும் ஏகம் என உணருகிறான். தான் கர்மம் செய்பவில்லை யென்றும், பிரகிருதியின் குணங்களால் கர்மங்கள் செய்யப்படுகின்றனவென்றும், ஆத்மா கர்மசம்பந்தமில்லாத அஸங்கனென்றும் உணரவேண்டும். *கர்மம் செய்கிறவன் தனக்கென்றில்லாமல் ஈசுவர யக்ஞமாக எல்லாக் கர்மங்களையும் நிலைக்க வேண்டும். கர்மங்களை நமக்கென்றுவது ஈசுவரனுக்கென்றுவது ஆக இருவிதமாய்ச் செய்கிறோம். நமக்கு என்று செய்யும் பக்ஷத்தில் பந்தத்திற்குட்படுகிறோம். ஈசுவரனுக்கு என்று கர்மங்களைச் செய்யும் பக்ஷத்தில் ஈசுவரனுடைய ஸேவகராகக் கர்மங்களைச்செய்கிறதாக நினைப்போம். அப்போது எல்லா ஜீவராசிகளின் மேலும் உள்ளன்பு உடையவராய் இருப்போம். செய்யும் கர்மக்களுக்கு நாம் சாக்ஷிமாத்திரமாக இருப்போம், இந்த நிலைபெறுவதில் அடிக்கடி சந்தேகங்கள் நம் மநத்தில் எழும். ஞாநம் என்ற கத்தியால் அவைகளை அறுக்கவேண்டும், சந்தேகங்கள் கீழான மநத்தின் கார்யம். அதாவது, காம மநத்தின் கார்யம். மேலான மநத்தில் அதாவது, காமரகிதமான மநத்தில் அவை உண்டாகா. எவனிடத்தில் பக்தியும் அன்பும் பூர்ணமாகின்றனவோ அவன் மெய்யுணர்வைச் சுலபமாய்ப் பெறுகிறான், "சந்தேக ஆத்மாவிற்கு இவ்வுலகமுமில்லை மற்றைய உலகமுமில்லை.சுகமுமில்லை" † சுகமுமில்லை என்ற வசநம் கவனிக்கத்தக்கது. சந்தேகத் தன்மையையுடைய சில சோம்பேறிகள், மேல் மநம் அல்லது காமரஹிதமான மநம் நம்மிடம் ஏற்கனவே இருக்கிற படியால் மனித வர்க்கத்தினரின் பொது விகாஸமுறையின் கடைசியில் எல்லாருக்கும் சுகிர்தம் லபிக்கும் என்றும் அதனால் ஞாநத்தைப் பெறுதல் அநாவசியம் என்றும் நினைக்கும் தப்பான நினைப்பைத் தொலைப்பதற்காக மேற்படி வசநம் ஏற்பட்டிருக்கிறது.

---

* பகவத் கீதை 3-ம் அத்யாயம் 27—28-வது சுலோகங்களைப்பார்க்க.

† பகவத்கீதை 4-வது அத் 40-வது சுலோகத்தைப்பார்க்க.

33. உண்மையான பிரார்த்தனை இதுவாம்:—

"உயர்நலமமைந்த வஸ்துக்களையும் அவைகள் நமக்கு உபயோகமாகு முறையையும், அறிந்து தினந்தோறும் நம்முடைய வாழ்நாள் அவைகளால் நலம்பெறும்படி அவைகளின் அறிவை அருளவேண்டுமென நம்முடைய பிரார்த்தனை செழவேண்டும். பிரார்த்தனையில் எல்லாம் பரமாத்மாவான 'பர வஸ்துவினின்று உண்டாகின்றன என்ற சிந்தனை எப்போதும் இடைவிடாமல் இருத்தல் வேண்டும்.''

34. ஆத்மக்ஞானப் பயிற்சி, மன ஐகாக்ரியத்தினால் தான் கூடும். ஐகாக்ரியம் எப்போதும், தினந்தோறும் ஒவ்வொரு நிமிஷமும் அநுஷ்டானத்தில் இருத்தல் வேண்டும்.

தியானம் என்பது, மனம் வெளிவிஷயங்களில் செல்லாமல் இருத்தலாம். ஐகாக்ரியம் என்பது குறித்த லக்ஷியத்தில் நம்மாயுஸ் முழுமையையும் ஒரு முகப்படுத்தலாம். உதாரணமாக, பிரியமுள்ள தாயானவள் தன்னுடைய குழந்தைகளின் சுகிர்தத்தை எல்லாவற்றிலும், எந்தக் காரியத்திலும், கருதியவளாய் ஒழுகுவாள். அவர்களின் சுகிர்தத்தை, ஒரு விஷயத்தில் மாத்திரம் நாடி, அதிலேயே ஒரு நாள் முழுமையையும் கழிக்கமாட்டாள். சிந்தனையானது தன்னைப்பெருக்கிக் கொள்ளும் இயல்பினது, மனம் ஒரு விஷயத்தில் நிலையாக நிற்பின், மனம் அவ்விஷயாகாரமாக ஆகிறது. அவ்விஷயசம்பந்தமான எல்லாம் மனத்தில் உண்டாகின்றன. அதனால் தான் ஒரு விஷயத்தைப்பற்றி இடையறாமல் தியானிக்கிற வித்தபுருஷன் (Mystic) அவ்விஷயத்தைப்பற்றிய ஞானத்தைப் பெறுகிறான். இதனால் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் அடியிற்கண்டபடி உபதேசம் செய்திருத்தலின் உண்மை தெளிவுபெறும்.

என்னையே நினை, என்னையே சரணமாக அடை,
உண்மையில் என்னை அடைவாய்.

உலகவாழ்வான நம்முயிரே நம்முடைய ஞான குரு. அந்நீத ஆத்மாவின் வியக்த ரூபம். ஆத்மாவோ பரமாத்மா வியக்தப்படும் நிலைமை. ஆகவே எல்லா முறைகளும் நலந்தரும். எல்லா முறைகளும், உயர்ந்த லக்ஷியமாகிய பரபக்தியின் ஓரோர் அம்சமாம். "பரபக்தி என்பது, கர்மங்களின் நிறைவாம்." இது

பகவத் கீதையின் உபதேசம். இம்முறையில் நடைபெற சித்திகளை அடைவோம். அவைகளை உபயோகிக்கவேண்டும். அப்படிச் செய்வதால் அநேக ரஹஸ்யங்கள், உண்மைகள் நமக்கு வெளியாகும். ஆனால் ஸித்திகளைப்பற்றி அதிகமான மதிப்புக்கொள்ளவேண்டாம்; அவைகளின் இடையூறுகளையும் அலக்ஷியம் செய்யவேண்டாம். சித்திகளை பூர்ணமாக நம்புகிறவன் மலையின் சிகரத்தையடைய மலையின்மேல் ஏறுகிறவன், முதலில் தங்கும் இடத்தைக்கண்டு (First Station) கருவம் கொண்டு வெற்றிபெற்றதாக' நினைப்பவன் போல் மோசம் போவான்.

35. தான் மேலேறவேண்டுமானல், அது பிறர் உதவியால் அன்று என்பது ஸக்மார்க்க முறையின், என்றும் தவறாத தர்மம். ஒரு தேவனே உலகத்தில் தோன்றலாம்; திவ்ய ஆதேசங்களைச் செய்யலாம். ஸித்திகளைக் காட்டலாம். நூற்றுக்கணக்கான உண்மைகளைத் தெரிவிக்கலாம். அப்படியாயினும் மனிதன் முன்போலவே அறிவிலியாகவே இருப்பான். தான் உயர்வதும் தாழ்வதும் முறையே தன் முயற்சியாலும் அதன் குறைவாலேயுமாம்.

"தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான் செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனு மாமே."

என்ற திருமந்தரம் உய்த்துச் சிந்திக்கத்தக்கது.

36. தீமையைக் கர்மத்தால் மட்டுமன்றி, எண்ணத்தாலும் செய்தல் கூடும். யாதேனும் ஒரு காரணம் பற்றிப் பிறனைப்பகைத்துத் தீய சிந்தனை கொள்ளுதலும், பிறன் கொடுமை செய்தானேயென வெண்ணி அதை மறக்காமல் அவன் பால் பழிவாங்க நினைத்தலும் பாபமே. அது கொலைத்தொழிலுக்கு நேராம். தீமையாம் பொய்ச்சமயங்கள் என அறிந்தும் மனச்சாக்ஷிக்கு விரோதமாய்ப் பிறர்வார்த்தைக்குப் பயந்து அவைகளின் முறைகளை அநுஷ்டிக்கிறவன் ஈசுவராம்சமாகிய தன் ஆத்மாவை நிந்திக்கிறவனாகிறான். உண்மையில் அஸத்யம் செய்கின்றவனாக ஆகிறான். சொந்த ஸ்திரீயினிடத்திலேனும் அதற்குப் புறம்பேனும் விஷயநாகர்ச்

சியை இச்சிக்கிறவன், உண்மையில் வியபிசாரனேயாகிறான், பிறர்க்கு நியாயமாய்த் தான் செய்யக்கூடிய நல்ல வுபதேசம், வேறு நல்ல உபகாரம் இவைகளைச் செய்யாதொழித்து, தன் சுயலாபத்தைக் கருதி விஷயசுகத்திற்காக உலகப் பொருள்களைப் போற்றிக் குவிக்கின்றவனே, உண்மையான கொள்ளைக்காரனாகிறான். பிறர்குணத்தை நிந்தித்துத் தூற்றுவானும், பிறர்பால் உண்மையில்லாத விஷயங்களை ஆரோபித்துச்சுமத்துவானும் உண்மையில் திருடனைவிடத் தாழ்ந்தவனல்லன்.

37. ஒவ்வொருவனும் தன்னை ஏமாற்றிக்கொள்ளாமல் ஸத்யமாக நிகழின் பிறர் மேல் தோஷபுத்தியை விலக்கி அன்பு பாராட்டினால் உலகவிஷயங்களைப்பற்றி வேறு நலமுள்ள அபிப்பிராயம் ஜநஸமூகத்தில் பரவும். உலகவாழ்க்கையின் மதிப்பு நேர்மையாய் நிகழும்.

38. உயர்நலமமைந்த நற்சிந்தனையை விருத்திபண்ணுவாய். "நன்றே நினைமின்." பல விஷயங்களில் மநம் புகும்படி விடாதே. அதனால் அதன் சக்தி சிதறும். விஷய சுகமும் உலகவாழ்வும் அநித்யமானவை, என்று அறிவுறுத்தும் உயர் எண்ணங்களை மாத்திரம் கொள்வாய். அகத்தில் சாந்தத்தை யுண்டுபண்ணும் சிந்தனையை மாத்திரம் கொள்வாய்.

39. நீயும், உன்னைச்சுற்றியுள்ளவைகளும் அநித்யமானவைகளென இரவும் பகலும் இடைவிடாமல் நினைப்பாய். வீணான எண்ணங்களும், உபேக்ஷையான எண்ணங்களும் தீய எண்ணங்களைவிட பாதகமானவை. தீய எண்ணங்கள் உன்மநத்தில் எழாமல் இருக்கும்படி எச்சரிக்கையாக இருப்பாய்! அவை எழவே அவைகளுடன் போர்புரிந்து அவைகளைத் தொலைக்க முயலுவாய். இத்தன்மையான முயற்சி, உன் மநோதைர்யத்தை விருத்திபண்ணுமியல்பினது. வீணானவும் உபேக்ஷையுமான எண்ணங்களோ என்றால், உன் சித்தம் ஒருமை பெறாமலிருக்கும்படி செய்விக்கும். அதன் சக்தியைப் பலவழியில் சிதறும்படி செய்விக்கும்.

40. "தேஹோஹம்" நான் இந்த ஸ்தூல சரீரம் என்ற பிரமையை ஒழித்தலே முதற்கடமையாம். இச்சரீரத்தைச் சொற்ப காலத்திற்கு நீ குடியிருக்கும் வீடாக மதிப்பாய். பின்பு அதின் ஏவல்களுக்கு உட்படமாட்டாய். உன் சீலத்தில் எந்தெந்தப் பாகத்தில் நொய்மையும் குறைவும் இருக்கின்றதோ, அவைகளைநிவிர்த்திக்கும்படி அததற்கநுகூலமான சிந்தனைகளைக் கொள்ளுவதில் தீவ்ரமாக இருப்பாய். இவ்விதம் முயற்சி செய்ய, சொல்லமுடியாத ஒருவித சூந்ய நிலைமையை ஒன்றுமில்லா வெறுமையை, (Vacuum) உணர்வாய். அதனால் பயப்படாதே. அதை ஆநந்தஸ்வரூபியான ஞாநசூர்யன் உதிக்கப்போகிறான் என்பதை ஸூசிப்பிக்கும் சுகிர்தமான முன்னொளியாக (Twilight) நினைப்பாய். வியஸநமான மநோநிலை தீயதன்று. அதனால் அதை வெறுக்காதே. துன்பங்களாகவும் இடையூறுகளாகவும் தோன்றும் சம்பவங்கள் உண்மையில் உன் முயற்சியில் உனக்கு நலம் பயக்கவந்தவைகளென அறிவாய். அவைகளைச் சரியாய் அறிந்து கொண்டுசெலுத்துவாயாகில் நலந்தருமவைகளாகும்.

41. நேரும் ஸம்பவங்களெல்லாவற்றையும், சிஷ்யமுறையில் நன்றிபாராட்டவேண்டியவன் எவ்விதம் நடந்துகொள்வானோ அவ்விதமே நடைபெறுவாய். ஸம்பவங்களைப்பற்றி வியஸநப்படுதலும் அவைகளைப்பற்றி முறையிடுதலும் ஸந்மார்க்க முறையில் அதர்மமாம். வரப்போகும் துன்பத்தை விலக்குதல் நலமே. வந்தபின் அதை மாற்றுவோமென நினைத்தல் வீணேயாம். அதைப்பொறுத்தல் நலமாம். அநுபவிக்கவேண்டிய விஷயங்களைத் தவிர்க்கவொண்ணாது. இனிவரப்போகும் விஷயங்களைப்பற்றி முன் சிந்தனை கொள்ளுதலும் முன்பயங் கொள்ளுதலும் கூடாது. நமக்கேனும், பிறர்க்கேனும் யாதேனும் கெடுதல் நேரிடுமேயெனச் சிந்தனைகொள்ளற்க.

42. ஒவ்வொருவனும் உயர்நலமமைந்த லக்ஷியத்தைத் தன் முன்வைத்து எப்போதும் அதை நோக்கியவனாய்த் தன் மநம் வாக்குக் காயங்களை நேர்மைப்படுத்தி தன் உலகவாழ்க்கையை நடத்தவேண்டும். இதைவிட உயர்ந்த முறை வேறில்லை, இவ்விதமாக உல

கப் பகட்டாக இல்லாமல் உண்மையில் தான் நலம் பெறும்படி ஒருவன் முயற்சித்துக்கொண்டுவர, குறித்த லக்ஷியத்தைமேன்மேலும் அணுகுவான். ஆனால் இவ்விதம் லக்ஷியத்தை அணுகுதல் இலகுவில் முடியாது. இடையூறுகள் அடிக்கடி சம்பவிக்கும். அவைகளுடன் போராடியே முடிக்கவேண்டும். உயர்ந்த லக்ஷியத்தை அடையப் போகிறோமேயென்று இறுமாப்புக் கொள்ளற்க. ஒருவனுடையலக்ஷியம் உண்மையில் உயர்நல முள்ளதாக இருந்து அதை நோக்கிச்செல்லும் முயற்சியும் உண்மையாக விருக்குமாகில், இறுமாப்புக் கொள்ளுகிறதற்கு இடமேயில்லை. அஹங்காரத் துறவுபெற்றுப்பணிதலே வேண்டும். இனி மேன்மேலும் உயர்நலம் பெறுவோமென்ற உற்சாகமும் மேன்மேலும் வெளிப்பட்டுவரும் பிரக்ஞாபூமிகளும் இம்மார்க்கத்தில் நடைபெறுகிறவனைத் தைர்யப்படுத்தும். அவனுக்குக் கர்மமே உண்டாகாது. அது முற்றும் அற்றுப் போம். நம் முன்னர் இவ்விதமாக சிரேயஸ்கரமான நலங்கள் பல இருக்கின்றனவென அறிந்தோமாகில் ஓரோர்சமயம் நமக்குண்டாகும் மநச்சோர்வும் களைப்பும் போய்விடும். மநஎழுச்சி உண்டாகும். உயிர்வாழ்வின் பிரயோஜநத்தை இவ்வண்ணம் அறிந்தோமாகில், பிறப்பின் நலத்தை யறிவோம்.

43. செயலிலும் சிந்தனையிலும் பிறர் நலம் கருதல் இவ்வுயர்நிலைமையை அருளும். சுய நலம் பாராட்டுதலும், எக்காரியத்தையும் தன் நலம் என்ற அளவு கோலால் அளத்தலும் குறுகிய மநத்தை உண்டுபண்ணும். இத்தகைய மநத்தினன் மேலானகதி பெறுதல் இயலாது. தான் உயர் நலம் பெறுதல் பிறராலன்று, தன்னாலேதான் இயலும். அது இடத்தையும் காலத்தையும் பொறுத்ததன்று. எவ்விடத்திலிருப்பினும், எளியவனாயிருப்பினும்,* வலியவனாக விருப்பினும், ஒவ்வொருவனுக்கும் மேன்மேலும் தான் நற்கதியடையப் போதுமான அவகாசம் ஏற்படும். அதைப்பற்றிக்கொண்டு பிரகிருத ஜந்மத்தாலேற்பட்ட பிரயோஜநத்தையடைய முயலவேண்டும். *

---

*இக்காய நீக்கி யினியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போமவழி தேடுமின்
எக்காலத் திவ்வுடல்வந் தெமக்கான தென்று
தக்கால முன்னவர் அருள்பெற லாமே—திருமந்திரம்.

44. ஜர்மத்தின் பிரயோஜகம் ஸ்தூல உடலை ஓம்புதலும், அது சுகமாயிருக்கும்படிசெய்தலும், விஷயநுகர்ச்சியும், என நாம நம்புவோமாகில் உண்மையை அறியாமல் மதிமயங்கி, கீழானதை மேலானதெனவெண்ணி மோசம்போனவராவோம். நம்முடைய சரீரம் ஸ்தூலப்பிரகிருதியால் அமைக்கப்பெற்றிருப்பதால் அதன் போஷணைதான் நலமெனக் கருதுகிறோம். * உலகவிஷயங்களை நாடுகிறதால் உலகத்தின் புழுக்கள்போல் நடைபெறுகின்றோம். ஸ்தூலப்பிரவிர்த்தியைக் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைத்து, சூக்ஷ்மமான கதியை நாடி மேன்மேலும் அபிவிருத்திமுறையென்ற விகாஸமுறையில் பிரவேசிப்போமாகில் விஷய சுகத்தை லக்ஷியமாக வைத்துத் தற்காலத்தில் நடைபெறும் போலி நாகரிகம் மறைந்துபோம். நலமமைந்த புதிய நாகரிகம் அமைவுறும். அப்போது, இன்றியமையாதவை என நினைக்கப்படும் விஷயங்கள் உபயோகமற்றவையாக முடியும். உலகத்தின் ஒரு பாகத்திலிருந்து வேறொரு பாகத்திற்கு மனோவேகத்துடன் பிரக்ஞையைக் கொண்டுபோகும் சக்தியைப் பெறுவோமாகில், மின் சாரத்தினால் ஏற்படும் போக்குவரவு அநாவசியமென முடியுமன்றோ? எவ்வளவுக் கெவ்வளவு பிரகிருதி சம்பந்தத்தில் அழுந்துகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நமக்குவேண்டிய விஷய சுகங்கள் கீழ்க்கடையானவைகளாக முடியும். மனிதனிடமுள்ள முக்கியமானதான ஈசவரஸம்பத்து ஜடமல்ல. ஜடப்பிரகிருதிக் கேற்பட்ட நிர்ப்பந்தங்கள் அதைத் தாக்கா. ஜீவநத்திற்கு வேண்டியவை என்ன? இவ்வினாவிற்குச் சரியான விடை, வேண்டியவை என்ற வார்த்தையின் அர்த்தத்தைப் பொறுத்துள்ளது. வேண்டியவை எவை? புகைவண்டி, நீராவிக்கப்பல், தந்தித்தபால் முதலியவை இக்காலத்தில் நமக்கு வேண்டியவையாக இருக்கின்றன. ஆனால் இவைகளைப்பற்றிக் கொஞ்சமேனும் நினையாமல் கோடாநுகோடி ஜநங்கள் நீடிய சுகவாழ்வைப் பெற்றிருக்கிறார்களன்றோ? ஒருவனுக்குப் பத்து அரண்மனைகள் வேண்டுவன. ஒருவனுக்கு இரண்டு குதிரைவண்டிகள் வேண்டுவன. இவைபோல் அவனவன் வேண்டும் பொருள்கள் பலவாறாக விரியும். இவையெல்லாம் அவனவன் வேண்டுமென உண்டுபண்ணிக்கொண்டவைகளே. அவ

*கடோபநிஷத் 4-வது வல்லி 1-வது மந்த்ரம் பார்க்க.

னவன் இப்போது அநுபவிக்கும் சுகங்களை எப்போதும் அநுபவிக்க வேண்டுமென விரும்புவான். அவைகள் உண்மையில் நிலைத்திரா ஞானமுறையில் மேலேற அவை தடையாம். ஞானமுறையில் பயில, பயிலவேண்டுமென எண்ணிய மற்றவைகளை வேண்டாமெனவே கருதுவோம். விஷய சுகத்தைப்பற்றிய அவாவும் அவைகளை உண்டு பண்ணுதற்கு வேண்டிய சாதனங்களைப் பெருக்குதலில் உண்டாகும் விருப்பமும் நம்மை ஸன்மார்க்கத்தில் பிரவேசியாமல் தடுக்கின்றன.*

---

*அடியில் வரும் பாசுரம் இங்கு கவனிக்கத்தக்கது.

ஆசைக்கோர் அளவில்லை யகிலமெல் லாங்கட்டி
    யாளினும் கடன்மீதிலே
ஆணைசெல வேநினைவர் அளகேச னிகராக
    அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
    நெடுநாள் இருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
    நெஞ்சுபுண் ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
    உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதும்நா னெனனக் குளறியே
    ஒன்றைவிட்டு ஒன்றுபற்றி
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
    பரிசுத்த நிலையைஅருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
    பரிபூர ணானந்தமே.

—தாயுமானவர்.

ப. நாராயண ஐயர்.

தீபாவளியின் ஆராய்ச்சி.

(329-ம் பக்கத் தொடர்ச்சி.)

கேல்டிக்வர்ஷாதிக்கு முன்னதாகவே நோர்ஸ் வர்ஷாதி ஏற்படுவதற்குக்காரணம், ஸ்காந்திநேவியாவில் சரத்காலம் சீக்கிரமாகவே ஆரம்பிப்பதால்தான் என்று அபிப்பிராயப்படுகிறார்.

கிரேக்கரின் பூர்வபஞ்சாங்கப்படி முற்காலத்தில், அபதூரியா உத்ஸவத்தோடு வர்ஷம் முடிந்ததாகவும், ஹிபேஸ்டஸ், அதீனி இவர்களைக்குறித்த சால்ஷியா என்ற உத்ஸவம் முதல் வர்ஷாரம்பம் என்றும் தெரியவருகின்றது. இவ்வுத்ஸவமானது அக்டோபர்மாதக் கடைசி தினத்தில் ஏற்படுகிறது.

இவை தவிர நமது புராணங்களில் கூறப்பட்டுள்ள சம்பராஸுரவத காலமானது கெல்டிக்புராணத்தில் கூறியுள்ள மாயதூர யுத்தகாலத்தையும் ஐரிஷ் புராணத்திலுள்ள லாப்ரைட் ப்ரிட்கா (Fridgamen) ஜாதியாரின் யுத்தகாலத்தையும் அநுஸரித்திருக்கின்றது. பின்கூறிய யுத்தகாலமானது நவம்பர் மாதம் முதல் தினமாக ஏற்பட்டுள்ளது.

7. மேற்கூறிய ஆதாரங்களால் இந்தியா முதலான அநேக தேசங்களில் முற்காலத்தில் சரத் அயநமே வர்ஷாதியா யிருந்ததென்றும், அவ்வர்ஷாதிக்கு முன் ஏதோ ஓர் அஸுரன் ஹதம்செய்யப்பட்டதாகவும், அந்த ஸந்தோஷத்தால் புதுவர்ஷாதி பண்டிகை சுமார் நவம்பர்மீ முதல் தினமுதல் அநுஷ்டிக்கப்பட்டதாகவும் ஏற்படுகின்றன.

சம்பராஸுரவதம்

8. 𑌯𑌃 𑌶𑌂𑌬𑌰𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑍇𑌷𑍁 𑌕𑍍𑌷𑌿𑌯𑌨𑍍𑌤𑌂
𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑍍𑌯𑌾𑌂 𑌶𑌰𑌦𑍍𑌯𑌨𑍍𑌵𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍍 ।
𑌓𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌂 𑌯𑍋 𑌅𑌹𑌿𑌂 𑌜𑌘𑌾𑌨
𑌦𑌾𑌨𑍁𑌂 𑌶𑌯𑌾𑌨𑌂 𑌸𑌜𑌨𑌾𑌸 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 ॥

ரிக்வேதம் II (12) 11.

இந்த ரிக்குக்குப் பின் வருமாறு வித்வத்ஸ்ரீ திலகர் அர்த்தம் கூறுகின்றார். "மலைப்ரதேசங்களில் ஒளிந்துகொண்டிருந்த சம்பரனை இந்திரன் கண்டுபிடித்து சரத்ருது 40-வது தினத்தில் ஹதம் செய்தார்".

சரத்ருது 4-வது ருதுவானதால் சரத் 40-வது தினமென்பது [(60×3)+40=220] வஸந்தாதியாய் 220-வது தினமென்றும், அதாவது கார்த்திகைமீ 10-வது தினத்தில் சம்பராஸுரவதம் ஸம்பவித்ததென்றும் ஏற்படுகின்றது. விஷுஅபஸரணத்தால் ருதுக்களும் மாறிவருதலால் ஒருகால் இதுவும் ஐப்பசிமீத்தில் தற்காலத்தில்

அநுஷ்டிக்கப்படுவதற்குக் காரணமாகலாம். வேதகாலத்திய சம்பராஸுரவத சரித்ரமே புராணகால நரகாஸுரவதமாகவும், நரகாஸுரவதம் வருஷமுடிவைக் குறிக்கிறதென்று நிர்ணயிக்கப்படும்பொழுது சம்பராஸுரவத சரித்திரமானது வேதகாலத்தில் வர்ஷமுடிவும், வர்ஷாதியும் சரத்காலத்திலும், சரத்விஷுவை (autumnal equinox) யநுசரித்து ஏற்பட்டனவென்றும், இவ்வர்ஷாதியைக்கொண்டாடும் ஓர்பண்டிகையே தற்காலத்தில் தீபாவளிப்பண்டிகையாய் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றதென்றும் லகுவாய் நிர்ணயிக்கத்தக்கதாயிருக்கின்றது.

விஷுவந்தம் மத்யே ஸம்வத்ஸரஸ்ய ஏதேந வை தேவா:
ஏகவிம்ஶேநாதித்யம் ஸ்வர்காய லோகாயோதயச்சன்॥

ஐதரேயப்ராஹ்மணம் IV. 18.

9. இதில் விஷுதினமானது வர்ஷத்தின் மத்யதினமென்றும், அது ஸத்ர யாகத்துக்கு மத்தியதினமாக மாறுமென்றும், அன்று செய்யும் ஸ்தோமங்களால் தேவர்கள் சூர்யனைக் கட்டிப் பாதாளத்தினின்றும் கிளப்புகின்றார்களென்றும், சொல்லப்பட்டிருக்கின்றன. இதனால் குறிப்பிட்ட விஷு சைத்ரவிஷு தானென்று நன்றாய்த் தெரிகின்றது. சைத்ரவிஷு மத்யதினமானமானால் ஐப்பசிவிஷு தான் வர்ஷாதியென்பது நிச்சயமாகிறது.

10. மேற்கூறிய ஆதாரங்களால் (1) நாமிப்பொழுது அநுஷ்டிக்கும் தீபாவளிபண்டிகையானது முன்னொருகாலத்தில் பல தேசங்களில் அவ்விதமாய் வர்ஷாதி பண்டிகையாய் விளங்கிவந்ததென்றும் (2) சரத் (அல்லதுஐப்பசி) விஷுவே முற்காலத்தில் வர்ஷாதியென்றும்,

(3) இப்பண்டிகையானது ஸாமான்யமாய் அக்டோபர்மீ 16௳ முதல் நவம்பர்மீ 16௳ வரை அதாவது ஐப்பசிமீத்திலும் விசேஷமாய் நவம்பர்மீ முதல் தினத்திலும் கொண்டாடப்பட்டு வருகின்றதென்றும்,

(4) ஒவ்வொரு புராணத்திலும் கூறப்பட்டுள்ள விருத்திராஸுரவதம், சம்பராஸுரவதம், நரகாஸுரவதம் முதலானவைகளெல்லாம் அதே காலத்தைத் தான் குறிக்கின்றனவென்றும்,

(5) இப்பண்டிகையும், இவ்விதவர்ஷாதியும் பலதேசத்தவர்களுக்கும் பொதுவாய் முற்காலத்திலிருந்திருக்கவேண்டுமென்றும் தெளிவாகின்றன.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்.

புத்தக வரவு.

வேளிர் வரலாறு:—இது செந்தமிழ்ப் பத்திராசிரியராயிருந்தவரும் இப்போது இராஜாங்கத்தார் முயற்சி செய்துவரும் அகராதி ஆராய்ச்சியில் பண்டிதராகத்தொழில்செய்கின்றவருமான இராமநாதபுரம்பிரஹ்மஸ்ரீ மு.இராகவையங்கார் அவர்கள் சரித்திர ஆராய்ச்சிமுறையில் எழுதிய வியாசம். தமிழ்நாட்டில் தமிழையும் அதன் புலவரையும் ஆதரித்த பெரியமுடிமன்னர்களான சேர சோழ பாண்டியர்களைத்தவிர சிற்றரசர்கள் பலர் தமிழ்வித்வான்களை ஆதரித்துவந்துள்ளாரர் என இவ்வியாசத்தால் நன்கு புலனாகும். அவ்விதம் ஆதரித்துவந்த வேளிர் என்ற ஜாதியர்களில் எழு சிற்றரசர்கள் ஈகை, கல்வித் திறமை முதலிய நற்குணங்களில் மிகவும் பிரக்கியாதி பெற்றவர்கள் என்றும், அவ்வேளிர் என்ற வகுப்பினரே பின்னர் வேளாளர் எனக் கருதப்படுகிறார்களென்றும், அவர்கள் ஆதியில் யது சக்ரவர்த்தியின் மரபினராக விருந்தனரென்றும் வைதிக லௌகிக ஆசாரவியவகாரங்களிற் பிராமணருடன் ஸம்பந்தம்வைத்துக்கொள்ளாமையால் சூத்ரநிலைமைக்குத் தாழ்ந்துவிட்ட 12 க்ஷத்ரிய வம்சங்களில் திராவிடவேளாளரும் ஒருவராக விருக்கக்கூடுமென்றும், இவர்கள் த்வாரகாபுரத்திலிருந்து கத்தியவார் கூர்ஜரம் முதலிய நாடுகளுக்குச் சென்று பின்பு மேற்குக் கடலோரமாய் கோங்கண தேசத்திலும் பின் தென்னாட்டிலும் குடியேறினார்கள் என்றும்,பின்னும் சில விஷயங்கள் இந்த வியாசத்தில் வெளியாகின்றன. இந்த வியாசத்தை எழுதி முடித்திருப்பதில் ஐயங்கார் அவர்களது புத்திநுட்பமும் ஆராய்ச்சியின் ஆழமும் விரிவும் மிகவும் ஆச்சரியமாக விளக்கின்றன. விஷயங்களை வார்த்தைகள் லோபமின்றித் தெளிவாயும் அழகாயும் சொல்லுதலும்,ஆங்காங்கு உரிய சாக்ஷியங்களையும் ஆதாரங்களையும் எடுத்துக்காட்டலும், மிகவும் அருமையாக விருக்கின்றன. இத்தகைய வியாசங்களன்றோ அறிஞர்களால் நன்கு மதிக்கற்பாலன? இந்த வியாசம் ஒரு பெரிய உண்மையை விளக்குகின்றது. இந்தியா என்ற தேசம் ஒரே ஜநஸமூகமாக இருந்திருக்கிறதென்றும், அதன் மநோபாவங்களும் ஒரேதன்மையனவாக இருக்கின்றனவென்றும்,இந்தியா தேச முழுமையும் ஆரியவம்சத்தினராக வேண்டுமென்றும், ஆதரிக்கும் பல சூசனைகளை நம் ஐயங்கார் அவர்கள் தக்க சான்றுகளுடன் எடுத்துக்காட்டியுள்ளார். விஷயங்களை நன்கு ஆராய்ச்சி செய்யாத சில புத்திமான்கள் இராமாயணத்தில் பிரஸ்தாபிக்கப்படும் வாநரர்களை திராவிடர்களுடைய பூர்வீகர்களென்று வீணும் விபரீதமாயும் மதித்து அதன்மேல் ஸ்ரீமத் வால்மீகி மஹரிஷி திராவிடர்களை வாநரர்களாக விவரித்திருக்கிறார் என்று நினைத்து அம்மஹரிஷியை மனத்தில் தோன்றியவாறு நிந்தித்து வருகின்றார்கள். அவர்கள் இந்த வியாஸத்தைச்சற்று கவனித்துப் படிப்பார்களாகில் இராமாயணத்தைப்பற்றியும் வான்மீகி மஹரிஷியைப்பற்றியும் அவர்கள் கொண்ட கொள்கை தவறு

என்றும் வீணுகப் பெரியாரை நிந்திப்பதினுல் உண்டாகும் பாபத்திற்கு உள்ளாகிக்கொண்டார்களென்றும் வெளிப்படும். இவ்வியாசம் இன்னும் ஒரு பெரும்பயன் தருமியல்பினது. அதாவது, இந்தியர்களான இப்போதிய பல ஜாதியார்கள் தங்களை ஒரு ஜநஸமூகத்தினராக எண்ணுவதற்கு அநுகூலமான போதிய சாக்ஷியத்தைப் போதிக்கின்றது. இத்தன்மையான அநேக வியாசங்களை நம்முடைய ஐயங்கார் அவர்கள் வெளிப்படுத்துவார்கள் என்று நாம் பிரியத்துடன் எதிர்பார்க்கிறோம்.

சற்குரு சரண நீழலில்:—ஸ்ரீமான் இலக்ஷ்மீநாராயண ஐயரவர்கள் "ஸத்குருபாதங்களில்" என்ற நாமதேயத்துடன் முன் தமிழில் மொழி பெயர்த்துப் பிரவிசித்தம் செய்த நூல், இப்போது, ஸ்ரீமான் தி. மீநாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களால் புதிதாய்த் தமிழில் மொழிபெயர்க்கப்பெற்று சற்குருசரண நீழலில் என்ற நாமத்தை வகித்து வெளிவந்திருக்கிறது. இது நன்றாய்ச் செய்யப்பெற்றிருக்கிறது; உரிய இடங்களில், ஆன்றோர் பழைய பாசுரங்களும் வசநங்களும் உதாரணங்களாக எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன. இப்புத்தகம் சங்மார்க்க முறையில் பயிலுவோர்க்கு மிகவும் அநுகூலமானது. உயர் நலமுள்ள விஷயங்கள் யாவரும் எளிதில் அறிந்து அநுஷ்டிக்குமாறு, வெளியிடப்பெற்றிருக்கின்றன. இதன் விலை அணு 3 தான். இதை வேண்டுவோர் கோயமுத்தூர் கிருஷ்ண விலாச அச்சியந்திரசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

பத்திரிகை வரவு.

சங்கீத ஸத்ஸம்ப்ரதாய தீபிகை:—இது சென்னை ஹிந்து ஸங்கீத பாடசாலைத்தலைமை உபாத்தியாயர் வி. அரங்கசாமி ஐயங்கார் அவர்களுடைய பத்திராதிபத்தியத்தின் கீழாகப் பிரசுரிக்கப்படும் பத்திரிகை. இதன் முதலாவது பதுமம் இரண்டாவது இதழ் கிடைத்து நம்மால் பார்வையிடப்பட்டது. அதின் சொற்ப பாகத்தில் தேசவர்த்தமானங்களைப் பிரசித்தம் செய்திருப்பதோடு அதின் பெரும்பாகம் நமது நாட்டின் புராதந ஸங்கீத சாஸ்திரத்தின் நுட்பங்களின் விவரணம் அடங்கியுள்ளது. தற்காலத்தில் சங்கீத பயிற்சியையே தங்களுடைய விர்த்தியாகக்கைக்கொண்டு ஜீவிப்பவர்கள் வெகுபேர்கள் நமது நாட்டில் இருப்பினும், ஹிந்து காந சாஸ்திரத்திற்குமட்டும் விசேஷமாக உரித்தாகிய ஸ்வரூவேறுபாடுகளையும், கமகதிட்பங்களையும், சுருதி மூர்ச்சனைகளையும், வக்கிரம், வர்ஜம் முதலிய சூக்ஷ்மங்களையும் பெரியோர்களால் விதிக்கப்பட்டிருக்கும் கீதப்பிரமாணங்களையும் முப்பத்தைந்தாகவும் நூற்றெட்டாகவும் வகுக்கப்பெற்று தோன்று

513

தொட்டு வழங்கப்பட்டுவரும் லய வரிசைகளையும் நன்குணர்ந்து அநுஷ்டிக்கவும் வியவஹரிக்கவும் பாண்டித்யமுள்ள காயக பண்டிதர்களைக் காண்பது மிக்க அரிதாயிருக்கின்றது. வாகட சாஸ்திரத்தின் ரகஸ்யம் அறியாத பலர்கள் கைதேர்ந்த வைத்தியர்களாகவும், மந்த்ரங்களின் பொருள் கொஞ்சமேனுமறியாதவர்கள் உபாத்தியாயர்களாகவும், சிலமென்பதைச் சற்றேனும் மதித்து நடக்காத புன்மை யுடையவர்கள் பாகவதர்களாகவும், வைராக்யம் நித்தியாநித்திய வஸ்து விவேகம், சமதமாதி பண்புகள் ஒன்றும் பயின்று அறியாதவர்கள் ஸந்யாஸிகளாகவும் சஞ்சரித்து வெகுமானிக்கப்பட்டுவரும் இக்காட்டில் சங்கீத சாஸ்திர முறைப்படி இராகம், தாளம், பாவம் இவைகளினாராய்ச்சியின்றி சங்கீத வித்வான்களாகப் பிரசித்தி பெற முயல்வது ஒரு வியப்பன்று. இனிமையான குரலுடன் செவியுவக்க இசைக்கும் சாமர்த்தியமுள்ளவர்களுக்கு சங்கீத சாஸ்திர பயிற்சியும் அமைந்துவிடில் பொன்மலருக்கு நல்ல பரிமளமும் இசைந்தாற்போல மிக்கபெருமையுண்டாகுமல்லவா? அஃதில்லாத் குறைவு நாம் முற்றிலும் வியசனிக்கத்தக்கது. அக்குறையை நிவிர்த்திக்கும் வண்ணம் சாஸ்திர நுட்பங்களை நன்கு ஆராய்ந்தவர்களென்று வெளியாகிற வி. அரங்கசாமி ஐயங்கார் அவர்கள் இப்பத்திரிகையை பிரகடனம் செய்ய முயன்றிருக்கிறார்கள். சங்கீத சாஸ்திரத்தின் பல கோட்பாடுகளை எல்லோரும் சுலபமாக அறிந்து கொள்ளவேண்டுமென்கிற கருத்துடன் விஷயங்கள் சாமான்ய ஜனங்களுக்கும் அர்த்தமாகும்படியாக பொருத்தமான நடையில் விவரித்திருப்பது நாம் முக்கியமாகக் கொண்டாடவேண்டிய அம்சம். சங்கீத பயிற்சியை ஜீவன விர்த்திக்காவது, அல்லது ஆத்ம சுகத்துக்காவது அபேக்ஷிக்கிறவர்கள் இப்பத்திரிகையை கிரமமாகப் படிப்பதினுல் விசேஷமான யதார்த்த ஞானத்தையும் தேர்ச்சியையும் அடைவார்களென்பதில் சற்றேனுமையமில்லை. இந்தப் பத்திரிகைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் சந்தாத்தொகையும் மிகவும் அற்பமாக விருப்பதால் சங்கீதமானது தனவான்களுக்கும் ஏழைகளுக்கும் சமானமாக விருப்பதுபோல் இப்பத்திரிகையும் எல்லோரும் வாங்கிப்படிக்கக் கூடியதாயிருக்குமென்று நம்புகிறோம். இப்பத்திரிகை எல்லாராலும் முக்யமாக சங்கீத அபிமானிகளால் ஆதரிக்கத்தக்கது.

பத்திராதிபர்.

சமாசாரம்.

பிரெஞ்சு பண்டிதா:—சென்ற பிப்ரவரி ௴ 8௳ கல்கத்தா ஸம்ஸ்க்ருத கலாசாலையில் ஸ்ரீமான் ஸாதீச் சந்திர வித்யாபூஷணர் என்பவரின் அக்ராஸநத்தின் கீழ் ஒரு ஸபைகூடியது. அதில் பிரான்ஸ் தேசத்துப் பெண்மணி ஸ்ரீமதி ஸூஜ் ஸான் கர்பேலிஸ் (Suxanne Kurpales) என்பவருக்கு ஸை

ஸ்க்ருதத்தில் அவருடைய அபாரமான கல்வித்திறமையை உத்தேசித்து ஷிசபையார் பாரதீ யென்ற கௌரவப் பட்டம் அளித்தார்கள்.

ஸம்ஸ்கிருத பாஷையின் பூர்வம்*:—இது தேவபாஷையென்று சொல்லப்படுகிறது. சுக்கிரன் என்ற கிரகத்தினின்று, இப்பூமிக்கு ஸநத் குமாரர்களும் மற்றும் ஜ்யோதிஷ் புருஷர்களும் விஜயம் செய்தபோது, அவர்கள் இந்தப் பாஷையை பூலோகத்திற்கு அளித்தார்கள்.

ஷம்பாலா† என்ற க்ஷேத்திரம் ஹிமயமலைக்கு வடக்கே இன்றுமிருக்கிறது. அதின்கண் மஹாத்மாக்கள், சித்தர்கள் வஸிக்கிறார்கள். ஸநத் குமாரர்கள் நால்வர்கள் அந்த க்ஷேத்திரத்தில் தங்கியிருக்கிறார்கள். ஏழு வருஷத்துக்கு ஒருமுறை எல்லா தேசத்திலுமுள்ள சித்தபுருஷர்கள் (Initiates) இன்னும் கூடுகிறார்கள்.

இரண்டு வருஷத்துக்குமுன் தக்ஷிண துருவத்தைக்கண்டு பிடிக்க காப்டன் ஸ்காட் என்பார் சிலருடன் சென்றார். அதைக்கண்டுபிடித்துத் திரும்புகையில் காப்டன் ஸ்காட் என்பவரும் அவருடன் சென்ற சிலரும், பனிக்கட்டியுடன் வீசின கொடுமையான புயல் காற்றைச் சகிக்க முடியாமல் இறந்து போனார்கள். இது மிகவும் வியஸநகரமானது. ஆனால் இதில் இவருடைய தீரத்தன்மை விளங்குகிறது. மரணமாகும் நிமிஷம் வரை தேகத்தின் சுகத்தைக் கருதாமல் துருவத்தைப்பற்றியும், அதன் சுற்றுமுள்ள இடத்தைப்பற்றியும், அவைகளில் நிகழ்ந்த காட்சிகளைப்பற்றியும், தாம் சாஸ்திர சம்பந்தமாய்ச்செய்த ஆராய்ச்சியை தினந்தினம் குறித்துக்கொண்டேவந்தார். உண்மையைக் கண்டுபிடிக்கவேண்டுமென்ற ஆசையைத்தவிர வேறு எண்ணம் அவர் கொண்டார் இல்லை. அவர் தாம் இறப்போமென்று நன்றாய் அறிந்தும் துணிகரமாய்ப் பனிக்கட்டியுடன் வீசின புயற்காற்றில் வெளியேறிப்போனார். முன்னர் நம் தேசத்தில் மஹாபாரத யுத்தம் முடிந்தமேல் பாண்டவர்கள் உலகத்தை வெறுத்து மஹா பிரஸ்தானம் என்ற யாத்திரை செய்து உயிரைத் துறந்தனர்கள். அது ஞான முறைபற்றியதென்பார். காப்டன் ஸ்காட் செய்த துணிகரமான யாத்திரை சாஸ்திர விஷயத்தை விருத்தி பண்ணும்பொருட்டென்று அறியலாம். இரண்டிலும் தன்னை மறந்தல் என்ற உயர்ந்த தன்மையைப் பார்க்கிறோம். லக்ஷியங்கள் மாத்தி

---

*Man : Whence, How and Whither. P. 259.

†Man: Whence, How and Whither. P. 263.

ரம் வேறு. அவர் சென்று அநேக நாள் ஆகிவிட்டபடியால், அவருடைய வும் அவருடன் போனவர்களுடையவும் கதி என்னவாயிற்று என்று ஆஸ்டிரேலியாவினின்று பரிசோதனை சாதகக்கப்பல் ஒன்று தக்ஷிண துருவத்தை நோக்கி அனுப்பப்பட்டது. அச்சாதகக்கப்பலான் அவர் மரணமாயினரென்று தெரிந்தும் அவரால் எழுதி வைக்கப்பட்டிருந்த குறிப்புக்களைச் சேகரித்துக்கொண்டும் திரும்பி இருக்கிறான். அவர் எழுதி வைத்திருந்த குறிப்பில் தம்முடன் இறக்கின்றவர்களின் சந்ததியாருக்கு அங்கவஸ்திரம் கொடுத்து உபகரிக்க வேண்டுமெனத் தம் விருப்பத்தைக் காட்டியிருக்கிறார். இங்கிலாண்டில் இவர் விருப்பத்தை இராஜாங்கத்தார் பூர்த்தியாக நிறைவேற்றுகிறதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவருடையவும் இவருடன் கூட இறந்தவர்களுடையவும் சந்ததியார்களுக்குப் போதுமான அன்ன வஸ்திராதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இங்கிலாண்டில் இவருடைய தீரத்தன்மை என்றும் ஜனங்கள் மனத்தில் தங்கும்படியாக ஞாபகார்த்தமாக இவருடைய சிலையும் பின்னும் சில அடையாளங்களும் செய்விக்கப்போகின்றார்கள். இதற்கு இதுவரை, $4\frac{1}{2}$ லக்ஷம் ரூபா சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஏராளமான தொகை சேரும்.

சென்னப்பட்டணத்தில் அநாதைக் குழந்தைகளின் பாதுகாப்புச்சபை ஒன்று (Society for the protection of children) சென்ற 5 வருஷங்களாக நடைபெற்று வருகிறது. அதன் ஐந்தாவது வருஷக் கூட்டம் விக்டோரியா பப்ளிக் ஹாலில் சென்ற மாதம் 18௳ மாலையில் கனந்தங்கிய கவர்னர் அவர்களான லார்டு பெண்ட் லண்டு அவர்களின் அக்ராஸநத்தின் கீழ் நிகழ்ந்தது. சென்னை வாசிகளில் கல்வியிலும் செல்வத்திலும் உத்யோக முறையிலும் சிறந்தோர் அநேகர் கூடியிருந்தார்கள். இச்சபையின் வருஷாந்தர (ரிப்போர்ட்டு) அறிக்கைப் பத்திரத்தை ஆமோதித்து மாதுஸ்ரீ அனிபெஸண்டு அம்மையார் அச்சமயம் அழகாயும் மிக உருக்கமாயும் ஒரு விரிந்த உபந்யாஸம் செய்தனர். அதின் சுருக்கமாவது:—

1. இந்த ஸபையின் ஐந்தாம் வருஷத்து அறிக்கைப் பத்திரத்தைத் தங்களுக்கு விநியோகிக்க இச்சமயம் நான் எழுந்தேன். நீங்கள் அதைக் கைநீட்டி . வாங்கு முன்னர், இச்சபையின் கருத்து நேர்மையாய் நிறைவேறி வரும் பொருட்டு உங்களால் கூடிய உதவியைச் செய்வீர்கள் எனத் தீர்மானம் கொள்ள வேண்டும். கையில் வாங்கிப் பார்த்து பிறருடைய ஊக்கத்தின் பயனான நலம் வாய்ந்த கைங்கர்யங்களைப் பற்றி வீண் வார்த்தை பேசுவதில் பிரயோஜநம் இல்லை. கனந்தங்கிய அக்கிராஸநாதிபதி அவர்களே! இந்த ஸபையானது, தங்களுடைய உதவி பெற மிகவும் பாத்திரமானது. ஸ்நேகிதர்காள்! தாங்கள் இந்த ஸபையை எவ்வளவு

ஆதரித்து நடத்தி வரக் கடமைப்பட்டிருக்கிறீர்களோ அவ்வளவு ஆதரவு இப்போதிதற்கில்லையென்று நான் வியஸநத்துடனறிவித்துக்கொள்ளுகிறேன். இந்த ஸபையானது குழந்தைகளுக்குயாதொருவித அநீதியும் ஒருவரும் செய்யாமலிருக்கும் பொருட்டும், தாய்தந்தையர் இறந்துபோன ஆதரவற்ற குழந்தைகளை நல்வழியிற் பழக்கி, கல்வி பயிலுவித்தற் பொருட்டும் குழந்தைகள் ஸம்பந்தமான சட்டங்களை சமயம் நேர்ந்தால் மாற்றங்கள் செய்ய இராஜாங்கத்தாருக்கு விண்ணப்பித்துக்கொள்ளும் பொருட்டும சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது.

2. இன்று குழந்தைப் பருவத்திலிருக்கிறவர்கள் தான், நாளை முதிர்ந்த அநுபவம் பெற்ற மனிதர்கள் ஆகிறார்கள். ஒரு ஜாதியாரின் நாகரிகத்தை அளக்கப்புகும்போது கல்விகேள்விகளிலும் இரஸதாசாரங்களிலும், நற்பழக்கங்களிலும் அந்த ஜாதி ஸ்திரீகள் எந்நிலையிலுள்ளார் என முதலில் கவனிக்கிறோம். அவ்விதமே, அதிலும் மேலாக மேற்கண்ட விஷயங்களில் அந்த ஜாதிக்குழந்தைகளின் நிலைமையையே கவனிக்கவேண்டும். எத்தேசத்தில் குழந்தைகள் சரியானபடி பாதுகாக்கப்படாமலும் கல்வி பயிலுவிக்கப் பெறாமலும் இருக்கிறார்களோ, அத்தேசமானது ஈச்வர கிருபைக்கும் பாத்திரமாகாது, மனிதனாலும் நன்குமதிக்கப் பெறாது, அநாகரிகதேசம் என்றழைக்கப்படும். உங்களாலாதரித்து நடத்தப்பெறவேண்டிய சபைகளில் இதை விட உயர்ந்த கருத்துக்களை முன்னோக்கா யுடைய சபைகள் வேறு இல்லை என்றே சொல்வேன். நிற்க.

3. கடவுளுக்கடுத்தபடியில் அரசனிருக்கிறான். ஒரு தேசத்தில் தகப்பனிறந்து போன குழந்தைகள் அவ்வரசனிடமின்றி வேறுயாரிடந்தான் ஸஹாயத்தை எதிர் பார்க்கும்! இராஜாங்கத்தாருக்கும் அக்குழந்தைகளின் குறையைத் தாமே நேரில் விசாரித்துத் தீர்ப்பதை விட வேறு பாக்யமும் வேண்டுமோ?* இந்த நலமான உத்தரவாதத்தைக் கருதியே சபையின் ஒவ்வொரு வருஷாசம் அறிக்கைப் பத்திரங்கள் வாசிக்குங்கால் இராஜ பிரதிநிதியாக அப்வக்காலத்து கவர்னர் அவர்களே அக்ராஸநத்தில் வீற்றிருந்திருக்கின்றனர். இராஜாங்கத்தாரின் உதவி இச்சபைக்கு அதிகமாக இருக்கவேண்டியது.

---

*மஹாகவி ஸ்ரீ காளிதாஸரால் இயற்றப்பட்ட இரகுவம்சத்தில் 1-வது ஸர்க்கத்தில் திலீபசக்ரவர்த்தியினரசாட்சியைப் பற்றி அடியில் வருமாறு உள்ளது:—

ப்ரஜாநாம் விநயாதாநாத் ரக்ஷணாத் ஹரணாதபி।
ஸபிதா பிதரஃ தாஸாம் கேவலம் ஜந்மஹேதவஃ॥

"அத்தேசத்துக் குழந்தைகளை அரசனே கல்வி பயிலுவித்தும் உணவளித்தும் சத்துருக்களிடத்தினின்று காப்பாற்றியும் வளர்ப்பதால் அவர்களின் பிதாக்கள் குழந்தைகளின் பிறப்புக்கு மாத்திரம் காரணபூதர்களா யிருந்தார்கள்."

4. எத்தேசத்திலும், தர்மம் என்பது நம்மிலும் மெலியாரைக் கண்டு அவருக்கு உதவிபுரிதலாம்.*

நம்மிலும் எளியவர்களுக்கு உணவளிப்பதற்கே நமக்குச் செல்வத்தைக் கடவுள் கொடுத்திருக்கிறார். அப்படியிருக்க, பலத்திலும், அறிவிலும், அநுபவத்திலும் எளியவர்களாயிருக்கும் குழந்தைகளுக்கு மூத்தவர்களான ஆண் பெண்மக்கள் செய்யவேண்டிய கடமைகள் பல உள. அச்சிறுவர்களும் நம்மிடத்தினின்று பெறவேண்டிய ஸ்வாதந்த்ரியங்கள் அநேகம் உள்ளன. ஹிந்துக்களின சமயமுறை சாஸ்திரத்தில், நம்மிடமிருந்து ஸஹாயம் பெறவேண்டியே இருக்கிற நமக்குக் கீழான குழந்தைகளும் மிருகாதிகளும் நம்முடைய க்ரூர நடத்தையால் மனம் நொந்து கதறுமாகில், காருண்ய மூர்த்தியாகிய ஸர்வேச்வரனின் கோபத்திற்கு அவ்விராஜ்யம் இரையாகும், நாசமுறும் என்றே வரையப்பட்டிருக்கிறது.

5. இத்தேசத்தில் இராஜாங்கத்தார் குழந்தைகளின் விஷயத்தில் சிரத்தையையெடுத்து வருகிறார்கள். ஆனால் இக் காரியம் முழுமையும் இராஜாங்கத்தாரின் கடமை மாத்திரமென்று நீங்கள் நினைக்கக்கூடாது. உங்களில் தநிகர்கள் ஆதரவற்றகுழந்தைகளைப் பார்க்கும்போது உங்களுடைய சொந்தக் குழந்தைகளாகவே பாவித்து அவர்களுக்கு நலம்புரியுங்கள். இந்த அறிக்கைப்பத்திரத்தை ஆமோதித்துப் பேசுவதில் நான் வற்புறுத்திப் பேசவேண்டிய விஷயம் இன்னொன்றுளது. அதாவது இந்நாட்டில் எவ்வளவோ மேன்மையாகப் புருஷனுடன் உலகவாழ்க்கையை நடத்தவேண்டிய பெண்குழந்தைகளை இளம்பிராயத்திலேயே தேவதாசிகள் என்ற பெயரைக்கொடுத்துக் கோவில்களின் உத்ஸவங்களில் நாட்யங்களுக்காகவும் உயர்தர கைங்கர்யத்திற்கும் ஆதிகாலத்தில் அமர்த்துவதானமுறை நாளடைவில் ஆரிய நாகரிகத்திற்கு முற்றும் விரோதமான வழக்கமாக ஆயிற்று. அந்தோ! அவர்களின் கதி கொடிது! பாபமாகிய வியபிசாரத்வத்தால் காலக்ஷேபம் செய்பவர்களாகிறார்கள். இருபது வருஷகாலமாக இந்தியாதேசத்தில் நன்றாகக் கற்றுணர்ந்த பிரபுக்களுடனெல்லாம் நான் பழகிவருகிறேன். அவர்களெல்லோரும் இக் கொடியவழக்கத்தைத் தொலைக்கவேண்டியது அத்யாவசியம் எனக் கூறுகின்

---

*அடியிற்கண்ட குறள் இங்கு கவனிக்கத்தக்கது.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

ரூர்கள். ஆகையால் இந்த துராப்யாஸத்தை நிறுத்தவேண்டி, நீங்களெல்லாரும் இந்தச் சபையை யொரு சாதநமாகக் கொண்டு இவ் விஷயத்தில், கடுமையான விதிகளை எற்படுத்தும்படி ஸர்க்கார் சட்ட நிரூபணசபைக்கு விக்ஞாபநம் செய்யுங்கள். கோவில்களுக்குப் பொட்டுக் கட்டுதல் கூடாதென்று சட்டத்தைச் சீர்திருத்தும்படி கேட்டுக்கொள்ளுங்கள். ஹிந்துக்கள் தம்மத ஸம்ப்ரதாயங்களில் கவர்ன்மெண்டார் தாமே பிரவேசித்து யாதொரு மாறுதல்களையும் உண்டுபண்ண ஸம்மதியார்கள் என நான் அறிவேன். ஆனால், இளம்பிராயத்தினின்றே பெண்குழந்தைகளை வியபிசாரத்திற்குப் பழக்கிவைத்தலும் இந்துமதமாகுமோ? ஆகாதே. இல்லாள் அல்லவோ குலத்திற்கே சிரோபூஷணம்! இவ் விஷயங்களில் பொதுஜநங்களாகிய நீங்கள் எல்லோரும் ஏகோபித்து உங்களுடைய தீர்க்கமான அபிப்பிராயத்தை கவர்ண்மென்டாருக்குத் தெரிவித்தால் அவர்கள் பிறகு பிரவேசித்து வேண்டிய சட்டங்களை ஏற்படுத்துவார்கள். அநேக காரியங்களில் பொதுஜநங்கள் எல்லாரும் ஒருமுகப்பட்டு நிச்சயமான அபிப்பிராயத்தைத் தெரிவித்தாலொழிய கவர்ன்மெண்டார் பிரவேசிக்க இடமில்லை.

6. கோவிலுக்குப்போதல் மாத்திரம் மதாநுஷ்டாநம் எனக் கொள்ளக்கூடாது. நம்மிடம் உதவி வேண்டுபவர்களுக்கு உதவி புரிதலும் இலேசமடைந்தவர்களை ஆறுதல் செய்தலும் பிறர் துன்பத்தைத் துடைத்தலும் உலகின் துக்கத்தைக் கொஞ்சமேனும் நீக்குதற்கு முயற்சித்தலும இவைதான் ஈசுவரனுக்குப் பிரியமான உண்மையான மத அநுஷ்டாநமாகும் என்று அறியுங்கள்.

பத்திராதிபர்.

Supplement to the Poornachandrodayam.

பிர்ஹ்மஞான மந்திரம், மதுரை.

1—3—1913.

தென் ஜில்லாக்களின் பிர்ஹ்மஞான கிளை சங்கங்களின் மகா சபை.

ஞான சகோதிரர்களே,

தென் ஜில்லாக்களில் உள்ள பிர்ஹ்மஞான கிளைச்சங்கங்களின் 11வது மகா சபை 1913ஞூ மார்ச்சுமீ 22, 23உ களில் திருநெல்வேலியில் கூடும். அப்போது ஸ்ரீமான் பி. பி. வாடியா அவர்கள் அக்கிராஸனம் வகிப்பார்கள்.

பாண்டியநாட்டின் பிர்ஹ்மஞான கிளைச்சங்கங்களின் மகா சபையும் அச்சமயம் கூடும்.

நடைபெறும் விஷய கிரமங்கள் மறுபக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

ஷை சபைக்கு தாங்கள் வரும்படியாய் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ப. நாராயணய்யர்,
தென் ஜில்லாக்களின் பிர்ஹ்மஞான சபை
பிடரேஷன் அக்கிராஸனாதிபதி.

அ. ரெங்கசாமி அய்யர்,
ஷை காரியதரிசி.

வி. ராமச்சந்திரய்யர்,
பாண்டியநாட்டுக் கிளைச்சங்கங்களின்
அக்கிராஸனாதிபதி.

கே. சோமசுந்தரம் அய்யர்,
ஷை காரியதரிசி.

ஏ. சுந்தரசாஸ்திரிகள்,
திருநெல்வேலி பிர்ஹ்மஞான சபையின்
அக்கிராஸனாதிபதி.

குறிப்பு:—அங்கத்தினர்களும், நண்பர்களும் திருநெல்வேலிப்பாலம் ரயில்வேஸ்டேஷனில் இறங்கவேண்டியது.

தென் ஜில்லாக்களில் இருக்கிற பிர்ஹ்மஞான கிளை சங்கங்களின் 11வது மகா சபையினுடையவும் பாண்டிய நாட்டின் பிர்ஹ்மஞான கிளை சங்கங்களின் மகா சபையினுடையவும் விஷயகிரமங்கள்.

1913ளு மார்ச்சுமூ 21உ வெள்ளிக்கிழமை.

மாலை 5-30—6	வண்ணார்பேட்டை கிளப்பில் ஸ்ரீமான் பி. பி. வாடியா அவர்களின் "பிர்ஹ்மஞானமும் பிர்ஹ்மஞான சபையும்" என்பதைப்பற்றிய உபந்நியாசம்.
இரவு 9 மணி	மகா-ா-ா ஸ்ரீ ஆர். சீனிவாசய்யர் அவர்களின் ஹரிகதா காலக்ஷேபம்.

1913ளு மார்ச்சுமூ 22உ சனிக்கிழமை.

காலை 8—9	ஈ. எஸ். மீட்டிங் (எல்லா ஈ. எஸ். மெம்பர்களுக்கும்.)
9-15—9-30	ஸ்தோத்திரங்கள்.
9-30—10	மகா சபை அக்கிராஸனாதிபதி அவர்களின் ஆரம்ப உபந்நியாஸம்.
10—10-30	சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜி கனம் தங்கிய திவான் பகதூர் டி. சதாசிவ அய்யர் அவர்களின் "பிர்ஹ்மஞான சபையைச்சேர்ந்த இந்து மதஸ்தர்கள் தவிர்க்கவேண்டிய தப்பெண்ணங்கள்." என்பதைப்பற்றிய உபந்நியாசம்.

காலை 12—2 மகா சபையின் அக்கிராஸனாதிபதி அவர்களை யும் பிரஹ்மஞான சபையை சேர்ந்தவர்க ளையும் பார்க்க விரும்புகிறவர்கள் முன் தகவலின்மேல் பார்க்கலாம்.

மாலை 3—3-30 பிடேரேஷன் மீட்டிங்கின் காரியாலோசனை.

4—5 திருநெல்வேலி கிளப்பில் ஸ்ரீமான பி பி. வாடி யா அவர்களின் "பிர்ஹ்மஞான தர்சனாபடி விகாஸ முறையைப்" பற்றிய உபந்நியாசம்.

இரவு 9 மணி மகா-ள-ள-ஸ்ரீ ப. நாராயணய்யர் அவர்களின் புகைப்பட காக்ஷி.

1913ளு மார்ச்சுமீ 23உ ஞாயிற்றுக்கிழமை.

காலை 8—9 ஈ. எஸ். மீட்டிங் (செக்ஷன மெம்பர்களுக்கு மட்டும்.)

9—11 மகா-ள-ள-ஸ்ரீ ஆர். சுந்தரராஜ அய்யர் அவர்க ளின் "பிர்ஹ்மஞான தர்சனத்தின் சாக்ஷி யம்." என்பதைப்பற்றிய உபந்நியாசம்.

மகா-ள-ள-ஸ்ரீ அ. ரெங்கசாமி அய்யர் அவர்க ளின் "சன்மார்க்க முறையைப்" பற்றிய உபந்நியாசம்.

மகா-ள-ள-ஸ்ரீ டி. டி. ஆள்கொண்டா பிள்ளை அவர்களின் "அருள் குரு" வைப்பற்றிய உபந்நியாசம்.

மகா-ள-ள-ஸ்ரீ எனங்குடி வி. ராமச்சந்திர நாயுடு அவர்களின் "தியானத்தை" ப்பற்றி ய உபந்நியாசம்

காலை 12—2 மகா சபையின் அக்கிராசனதிபதி அவர்களை யும் பிர்ஹ்மஞான சபை மெமபர்களையும் பார்க்க விரும்புவோர்கள் முன் தகவல் மேல் பார்க்கலாம்.

மாலை 3—3-30 பாண்டியநாட்டுக் கிளை சங்கத்தார்களின் காரியாலோசனை.

4—5 பிரச்நோத்தரம், சம்பாஷணை.

5-15—6-30 ஸ்ரீமான் டி. ருமச்சந்திர ராயர் அவர்களின் "இந்தியாவில் பிர்ஹ்மஞான சபையின் காரியம் என்ன" என்ற விஷயத்தைப்பற்றிய உபந்நியாசம்.

ஸ்ரீமான் கே. சுப்பிரமணிய அய்யர் அவர்களின் "அவதார புருஷனை சமீபத்தில் எதிர்பார்த்தல்" என்பதைப்பற்றிய உபந்நியாசம்.

பிடரேஷன் கூடும் இடத்தில் ஸ்ரீமான் பி. பி வாடியா அவர்களின் "பிர்ஹ்மஞான முறையில் "யோகத்தை" ப்பற்றிய உபந்நியாசம்

அ. ரெங்கசாமி அய்யர்,
காரியதரிசி.

விக்டோரியா பிரஸ், மதுரை—1913.

(8) பகீரதன் கங்காதேவியை பூலோகம் வந்து தன் பெரியோர்களைக் கரையேற்றல் வேண்டுமெனப் பிரார்த்தித்தபோது, கங்கை மறுமொழி கூறியதாவது: "நான் பூலோகம் செல்லேன். ஏனெனில், ஜனங்கள் யாவரும் என்னிடத்தில் ஸ்நானம் பண்ணி தங்கள் பாபங்களைக் கொண்டு வந்து சேர்ப்பார்கள். இவ்விதம் என்னிடம் வந்து அடையும் பாபங்களை யான் எவ்விதம் சுத்தம் பண்ணிக்கொள்வேனென்பதை யோசனைசெய்து சொல்வாயாகில் அப்பொழுதுதான் பூலோகம் வரச் சம்மதிப்பேன் என்றனள்." அதற்கு பகீரதன் கூறியதாவது:—உலகத்தைப் பாவனம் செய்பவர்களும், பிரஹ்மத்தில் நிலைபெற்றவர்களும், சாந்தர்களும், பற்றற்றவர்களுமான ஸாதுக்கள் உன்னிடம் வந்தடைந்து உனது பாபம் யாவற்றையும் போக்கடிப்பார்கள். ஏனெனில், அவர்களிடம் ஸகலபாபங்களையும் நாசம் செய்யும் ஹரி வஸிக்கிறானன்றோ! யோகவாஸிஷ்டத்தில் அடியில் வருமாறு கூறியிருக்கின்றது:—"ஆசை ஸந்தேஹமற்றவர்களும், அஞ்ஞானமாகிய கிரந்தி நீங்கினவர்களுமாகிய ஸாதுக்கள் கிடைத்தால் தபஸ், தீர்த்தங்களால் என்ன பிரயோஜனம்"? இன்னும் பெரியோர்கள் கூறுவது பின் வருமாறு:(i) "ஸச்சிதானந்தபூமியெனப்படும் முடிவற்ற ப்ரஹ்ம பதவியில் எவனது மனமானது ஓய்வு அடைகிறதோ அவனது குலமே பவித்திரமாகும், ஈன்றெடுத்த அன்னையும் கிருதார்த்தையாவள், இம்மட்டோ, உலகமும் புண்ணியமடைந்ததாகும்" (ii) "ப்ரஹ்ம விசாரத்தில் க்ஷணமாவது எவனது மனமானது அசைவற்ற நிலையை அடையுமோ, அவன் ஸகல புண்ணிய தீர்த்த ஜலங்களிலும் ஸ்நானம் செய்தவனாவன், ஆயிரக்கணக்கான வேள்விகளை முடித்தோனாவன், அகில தேவர்களையும் பூஜித்தோனாவன், ஸம்ஸார ஸமுத்திரத்தினின்றும் தன் பிதிருக்களைக் கரையேற்றினவனாவன், திரிலோகங்களிலும் பூஜிக்கத்தகுந்தவனுமாவன்." (iii) "பரப்பிரஹ்மபதவியின் திருஷ்டியுண்டானால் ஸகலஜகத்தும் தேவலோகத்திய நந்தனவனம் போன்ற சிங்காரத்தோட்டமாகும், எம்மரமும் கல்ப விருக்ஷமாகும், எவ்வித ஜலமும் கங்கா தீர்த்தமாகும், அவனது செயல்கள் யாவும் புண்ணியச் செயல்களாகும், சுத்தாசுத்த ரூபமான வாக்குகள் யாவும் வேதாந்த ரூப

மாகும், அவன் வசிக்கும் பூமி காசி தேசமாகும், அவனது வியவகாரங்கள் யாவும் பிரஹ்மாகார விர்த்தி ஆகின்றது".

(9) இவ்வித ஸாதுக்களில் சிலர் ஹரியையும், சிலர் ஹரனையும் வணங்குவது காணப்படுவதால் இவர்களிடமும் சிவன் வேறு, விஷ்ணு வேறு, எனும் பேத திருஷ்டியும் விளங்குதலால் இவர்களைப் பவித்திரர்களென எங்ஙனம் கொள்ளல் தகும் என்ற வினவுக்கு உத்தரமாக, ஹரியை யாகட்டும், ஹரனை யாகட்டும், ஸமானமாக வணங்குபவர் என்றார். "ஹரி" அல்லது "ஹர" என்னும் பதத்திற்கு "தன்னை அறிவோர்களிடமுள்ள அக்ஞானத்தை அபஹரிப்பவன், போக்கடிப்பவன்" என்றருத்தம். ஹரியை யாவது ஹரனையாவது, ஜீவாத்மாவுக்கு அபேதமான வஸ்துவாகவாவது, அல்லது ஸர்வ பிரபஞ்சாத்மாவிற்கும் அபேதமாகவாவது ஸமான திருஷ்டியுடன் உபாஸிப்பவர்கள் என்பது பொருள். யோகிகளான தாந்தர்கள் முதலியோர் யோக சக்தியால் அநேக ரூபங்களைத் தரித்து வியவகாரங்கள் செய்தபொழுதும், அவ்வுருவங்களிலெல்லாம் தாங்கள் வேறு வேறு ஆனோம் எனும் மயக்கமின்றி எப்படி வியவஹாரம் புரிந்தனரோ, அப்படியே பிரஹ்மமும் தமது மாயா ரூபமான சக்தியால் சிவ, விஷ்ணு, கணபதி முதலான பல உருவங்களில் வஸித்து விளங்குகின்றது. இவ்வுருவங்களில் எல்லாம் விளங்குவது பிரஹ்மமேயன்றி வேறன்று எனத் துணிதலே அறிவு. இவ்வுலகத்தவர்க்கு அரியதாகிய இவ்வபேத திருஷ்டி இவர்க்கு எங்ஙனம் கைகூடிற்றெனின் அதற்காகத்தான் ஆத்ம சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்தவர்களும் என்றார்.

(10) ஸ்வ என்ற பதத்திற்கு அகண்டமான ஆத்மா என்றருத்தம். ஆத்மாவை விஸ்தரிக்கும் வேதாந்த சாஸ்திரங்களில் தேர்ச்சியடைந்தவர்கள், வேதாந்த சாஸ்திர வசனங்களை, உபக்கிரமம், உபஸம்ஹாரம், அப்யாஸம், அபூர்வதை, பலம், அர்த்தவாதம், உபபத்தி ஆகிய எழுவித லிங்கங்களால் பிரஹ்மாத்மாவில் தாத்பரியப்படுத்தி கருத்தை நிர்ணயம் செய்துகொண்டவர்கள் என்றருத்தமாகும். கர்மம், உபாஸனை, ஞானம் என மூன்று காண்டங்களாகப் பிரிந்திருக்கும் வேதத்திற்கு முடிவில் பிரஹ்ம

ரூபமாகிய ஆத்மாவே கருத்தென்பது, பாஷியக்காரரால் வேதாந்த சாஸ்திரத்தில் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது.

(11) பரப் பிரஹ்மத்தில் நிலை பெற்றவர்கள் என்பது உபநிஷத்தில் பிரதிபாதிக்கப்பட்டிருக்கும் காரிய காரணம் கடந்த பரப்பிரஹ்ம பதவியில் நிலையை அடையவேண்டியவர்களும், நிலையை அடைந்தவர்களும் எனப் பொருள்படும். முதல் பக்ஷத்தில் "கோபமின்மை, டம்பமின்மை, அஹிம்ஸை, க்ஷமை, நேர் நிலைமை, ஆசாரியனை வணங்கல், சௌசம், ஸ்திரத்துவம், தன்னடக்கம், இந்திரிய விஷயங்களில் வெறுப்பு, அகங்காரமின்மை, ஜநநம் மரணம் மூப்பு பிணி துன்பம் இவற்றுள் குற்றம் காண்டல், புத்திரன் மனைவி வீடு இவற்றுள் பற்றறல், ஒட்டுவிடல், இன்பத்திலும் துன்பத்திலும் சமமான நிலைமை, ஈசனிடத்தில் அசைவற்ற இடையறாத நேசம், தனித்த இடம் தேடல், ஜநக்கூட்டத்தில் வெறுப்பு, அத்தியாத்மக் ஞாநத்தில் நித்திய புத்தியும், தத்துவக் ஞாநங்களின கருத்தை உணருதலும்," இவைகளாகிய, பகவத்கீதையின் கண் எடுத்துரைக்கப்பட்ட பிரஹ்மாத்மைக்கிய ஞாநத்திற்கு ஸாதநங்களில் நிலைபெறுதலால், பரப் பிரஹ்ம நிஷ்டைக்கு முயற்சிப்பவர்கள் என்றருத்தம். இரண்டாம் பக்ஷத்தில் "பிரக்ஞை அடங்கினவனுய் ஸமாதியில் நிலைபெற்ற புருஷனது லக்ஷணம் எது? கேசவ! சொல்லல் வேண்டும்". என. வினவிய அர்ஜுநனுக்கு, "மநத்திலுதிக்கும் ஸகல காமங்களையும் அற நீக்கி ஆத்மாவினிடத்தில் திருப்தியடைந்தவனுய் வியவகரிப்பவனே பிரக்ஞை அடங்கினவன்" என பகவான் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் அந்நிலைமை உடைய பிரஹ்ம நிஷ்டர்கள் எனக் கருத்தைத் தருகின்றது. இந்த சுலோகத்தின் ஸகல கருத்துகளையும் அடக்கி அதன் வியாக்யாநத்தின் முடிவில் உரை யாசிரியர் தானும் ஒரு சுலோகம் தெளிவான நடையியற்றியிருக்கின்றனர். இந்த முதல் சுலோகத்திற்கு உரையாகிய சுலோகம் அடியில் வருமாறு:—

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சுலோகம் 2. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

மதுரமான வசநமும்.உண்மையும்,ஸந்தோஷமும், காருண்யமும், களங்கமற்ற ஸ்வபாவமும், ஸதாகாலமும், எவர்களிடம் வசிக்கின்றனவோ, அந்த ஸர்வ லோக குருநாதர்களும், உதார குணமும், பெருமையும் பொருந்திய புருஷர்களுமான, உதாஸிந ஸாதுக்களை யான் (மிகப்பணிவுடன்) நேசப்பூர்வமாய் நமஸ்கரிக்கின்றேன்.

உரை:—(1) "மதுரமான வசநமும்" என்பதற்கு பிரியமான வார்த்தை பேசும் ஸ்வபாவ முடையவர்கள் என்று அர்த்தம். பகவத்கீதையில் பிரமாணம் பின்வருமாறு:—"பிறர்க்குநடுக்கம் விளைவிக்காததும், ஸத்தியம், பிரியம, ஹிதம் இவை நிறைந்த வசநமும், தான் கற்க வேண்டியதைக் (வேத உபநிஷத் முதலிய சாஸ்திரங்களை) கற்றலும் வாக்கில் செய்யக்கூடிய தபஸ் எனப்படும்." மற்றோரிடத்தில் கூறியிருப்பது:—"பிரிய வசநம் கூறுதலால் ஸகல ஜந்துக்களும் திருப்தி யடைகின்றன. ஆதலின் அதையே மொழிதல் வேண்டும். ஏனெனில் வசநத்திலும் கூட தரித்திரம் ஏன்!". உலகத்தில் பொய் வார்த்தையில் அதிக பிரியமான மொழிகள் வழங்குகின்றன வாதலின், மதுரமாய்ப் பேசவேண்டுமாயின் பொய் சொல்லும்படி நேரும். அது தோஷமாதலால், இப்பெரியோரிடமும் அஃது ஏற்படுமோவென்றால் ஏற்படாதெனப் பின்வருவனவற்றால் காட்டுகின்றார்.

(2) அதாவது "உண்மையும் ஸந்தோஷமும்" என்றார். உண்மை என்றால் கண்டபடி கேட்டபடி சொல்லுதலென்றருத்தம். உண்மையும் சந்தோஷமும் ஸ்வபாவமாகவாவது அல்லது அறுஷ்டிக்கும் ஸாதநங்களாகவாவது எவரிடம் காணப்படுகின்றனவோ அவ்வித ஸத்புருஷர்கள் எனப் பொருள்படும். இதற்கு சுருதி ஸ்மிருதிகளில் பிரமாண வசநங்கள் பின்வருமாறு:— "சத்தியத்தினின்றும் வழுவாதே. சத்தியத்திலும உயர்ந்த தர்மமில்லை. அசத்தியத்திலும் தாழ்ந்த பாபமில்லை." "இவ்வுலகத்தில் எது காமத்

தால் விளையும் சுகமோ, மேல் உலகத்தில் இதனிலும் மேம்பட்ட தேவசுகம் எதுவோ, இவை யாவும் ஆசையை ஒழித்தவனின் ஆநந்தத்தில் பதினாறில் ஒரு பாகத்துக்குக்கூட ஈடல்ல. ஆதலால் ஆசையின்மை சந்தோஷத்தின் சிரேயஸுக்கு சாதநமெனக் கூறப்பட்டிருக்கின்றது.''

(3) இனி தயை யென்பது:—தன்னைப்போல் ஸகலபிராணிகளும் துக்கம் ஒழிந்து சுகமடைய வேண்டுமென்ற பிரார்த்தனையாகும். ஸர்வ பூதங்களிலும் பரமாத்மா வஸிப்பதைக் கண்டு யாவருக்கும் அபயமுண்டாக வேண்டுமென்று பிரார்த்திக்கிறவர்கள் பெரியோர். இதற்குப் பிரமாணம் கீதையில் அடியில் வருமாறு: "ஆத்ம உபமாநத்தால் சுகத்தையும், துக்கத்தையும், யாவரிடத்திலும், ஸமாநமாய்க்காணும் யோகியே சிரேஷ்டன் என்பது எனது கருத்து'' வேறு கிரந்தத்தில்:—"யாவரும் சுகத்தோடிருத்தல் வேண்டும், யாவரும் ரோகமற்றிருத்தல் வேண்டும், யாவரும் உயர்வை அடைதல் வேண்டும், ஒருவராவது துக்கமுடையவராயிருத்தல் கூடாது.''

(4) இனி மநத்தின் களங்கமற்ற சுபாவமாவது பாதஞ்சல சூத்திரத்தில் பின் வருமாறு:— "மைத்திரீ, கருணை, முதிதை, உபேக்ஷை இவற்றால். சுகம், துக்கம், புண்ணியம், அபுண்ணியம் ஆகிய விஷயங்களைப் பாவித்தலால் சித்தத்திற்குக் களங்கமின்மை உண்டாகின்றது.'' இவ்விடத்தில் சுகதுக்காதி சப்தங்களால் அவற்றை உடையவர்கள் குறிப்பிடப்படுகின்றனர். இச்சூத்திரத்தின் விளக்கம் பின் வருமாறு:—(i) சுகத்தை அநுபவிக்கும் ஜநங்களைக் கண்டவிடத்தில், நமக்கு நண்பர்களான இவர்கள், மாத்திரம் சுகத்தையநுபவிக்கிறார்களே என்று அவர்களிடம் பொறாமை கொள்ளாது மைத்திரம் பாவித்தல் வேண்டும். (ii) துக்கம் அநுபவிப்பவரைக் காணின் எப்பொழுது இவர்களுக்கு துக்க நிவிர்த்தி உண்டாகுமோவென இரக்கமே பாராட்டல் வேண்டும். அவர்கள் துக்கிப்பதைக்கண்டு சந்தோஷப்படுதலாவது அவர்களை மதியாது உபேக்ஷை அடைதலாவது கூடாது. (iii) புண்ணியவான்களைக் கண்டால் அவர்களது புண்ணியத்தைக்கண்டு உபேக்ஷையாவது

துவேஷத்தையாவது அடையாமல் அநுமோதகமாகிய சந்தோஷத்தையே கொள்ளல் வேண்டும். (iv) பாபிகளைக்கண்டால் துவேஷத்தையாவது, சந்தோஷத்தையாவது அடையாமல், கேவலம் உதாஸீந விர்த்தியாகிய உபேக்ஷையே பாவித்தல் வேண்டும். இவ்விதம் பாவனை செய்வோர்க்கு சுக்கிலமாகும் தன்மை உண்டாகிறது. அதனால் ராகத்துவேஷாதி மலம் நீங்கி சித்தமானது தெளிவையடைகிறது. மேற்கூறியபடி மைத்ரீ ஆதி நான்கு குணங்களைப் போலவே கீதா சாஸ்திரத்திற் கூறப்பட்டுள்ள ஏனைய குணங்களாகிய:—" அபயம், ஸத்வஸம்சுத்தி, அமாநித்வம், டம்பமின்மை முதலிய யாவும் இவ்விதமான சுப வாசனைகளே யாதலின் அவை யாவும் அவையவற்றிற்கு விரோதங்களான மலின வாஸனைகளை அகற்றுவிக்கும் சக்தியுடையவைகளாகின்றன.

5. இனி உதார குணமாவது:-உலகத்தில் அற்பமாயினும் திரவியம் செலவழித்தலைச் சகியாதவனுக்கு கிருபணன் என்று பெயர். இதைப்போல் புருஷார்த்த மடையாத அக்ஞாநியும் கிருபணனே ஆகிறான். "ஹே கார்க்கி, 'அக்ஷரம்' இன்னதென அறியாமல் இவ்வுலகத்தைவிட்டுச்செல்வோன் கிருபணனுவான்" என்று கூறப்பட்டிருக்கின்றது. உதாஸீந ஸாதுக்களோ வென்றால், மநுஷ்ய லோகம் முதல் பிரஹ்மலோகம் வரையுள்ள ஸகல அநுபவங்களையும், பிரஹ்மாத்மைக்கிய திருஷ்டியாலும், அநித்தியமாதலால் அவற்றின் மேல் வைராக்கிய திருஷ்டியாலும் தியாகம் செய்கின்றனராதலின் அவர்களை உதாரர்களெனக் கூறுதல்தகும். இவ்விடத்தில் ஓர் உண்மையான கதை இருக்கிறது. அஃது அடியில் வருமாறு:— ஓர் ஊரில் ஒரு பணக்காரனிருந்தான். அவன், அவ்வூரில் ஸ்ரீ கிருஷ்ணபகவானை உபாஸனையால் பிரத்தியக்ஷம் செய்து கொண்டு வஸித்து வந்த ஒரு பிராஹ்மணனிடஞ் சென்று. "ஐயா, உன் இஷ்ட தேவதையாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் எனக்குச் சந்ததியுண்டோ இல்லையோ வென்று, கேட்டுச் சொல்லல் வேண்டு" மென்று பிரார்த்தித்துப் பின்னும் கூறலுற்றான். "அவ்விதமெனக்கு சந்ததிக்கு அதிருஷ்டமிருக்குமாயின யானிவ்விடம் வசிப்பேன், அல்லவாயின் தீர்த்தயாத்திரைசெல்வேன்" என அதற்கு

அப்பிராஹ்மணனும் இஷ்ட தேவதையாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானைக் கேட்டு அந்தத் தனவானுக்கு சந்ததி யில்லையெனக் கூறியதின் பின்னர், அவன் வெறுப்படைந்து தீர்த்த யாத்திரை சென்று, வழியில் ஓரிடத்தில் ஒரு பெரியவரிருப்பதாகக் கேள்வியுற்று, அவரைத்தேடி தரிசனம் செய்து, அவரிடத்தில் தன் குறையைச் சொல்லி நின்றனன். அப்பொழுது அப்பெரியவரும் "நீ கிருஹத்துக்குத் திரும்பிப் போவாயாக. உனக்குச் சந்ததி உண்டாகுமெனத் திருவாய் மலர்ந்தருளினர்." அவ்விதமே திரும்பி வீடுவந்து சேர்ந்த அத்தனிகனுக்குச் சின்னாட்கழித்துச் சந்ததியுண்டாயிற்று. அதைக் கண்ணுற்று ஸ்ரீ கிருஷ்ணனை உபாஸித்த பிராஹ்மணனும் தன் இஷ்ட தேவனை நோக்கி "ஐயா! தாம் கிடைக்காதென்ற புத்திர பாக்கியம் இப்பொழுது கிடைத்திருக்கிறதே இதற்குக் காரணம் யாது என" வினவ பகவானும் அதற்குக்காரணம் சில காலம் சென்றபின் கூறுவதாய்ச் சொல்லினர். இவ்விதம் சிலகாலம் கழிந்த பின்னர், ஒருநாள் பிராஹ்மணனைப்பார்த்து பகவான் "ஓ பிராஹ்மண! இவ்வூரில் பிரதி வீடும் அலைந்து எனக்காக ஒரு மனிதன் தலை கொண்டுவா" என்றனர். அவனும் அவ்விதமே வீடுதோறும் சென்று "பரமேஸ்வரனுக்காக ஒரு தலைகொடுப்பாருண்டோ" வென்று யாசகம் செய்தனன். அவ்விதம் ஒருவராவது கொடுக்காததால் பிராஹ்மணனும் திரும்பி பகவானிடம் சென்று ஒருவரும் கொடுப்பாரில்லை என்று தெரிவித்தனன். உடனே "பகவானும் இக்கிராமத்திற்கு வெளியில் ஓர் சாது வீற்றிருக்கின்றனர். அவரிடஞ் சென்று எனக்காக அவர் தலையை யாசகம் செய்து வா" என்றனர். அவரும் அவ்விதமே சென்று யாசித்தனர். அதற்கு அந்தச் சாது விடை பகர்ந்ததாவது "அந்தோ என்பாக்கியமே பாக்கியம். ஏனெனில் எனது சிரஸ் பரமேச்வரனுக்கு அர்ப்பணமாகப்போகின்றது." என இதைக்கேள்வியுற்ற பிராஹ்மணன் ஓடிவந்து, தன் தலையைக் கொடுப்பதாக சாது ஒப்புக்கொண்டதைத் தெரிவித்தனன். உடனே பகவானும் பிராஹ்மணனைப்பார்த்து "எனக்காக, தன் தலையையே தானம் செய்யும் உதாரகுணமுடைய சாதுவுக்கு சந்ததியில்லாத ஒருவனுக்கு சந்ததியைக் கொடுக்கும் சக்தி இருத்தல் ஆச்சரியமோ பாராய்?" என்றனர்.

(6) ஸர்வலோக குருநாதர்கள் என்பது:—பிரஹ்ம ஸாக்ஷாத்காரம் அடைந்தவர்களாதலின் உலகத்திற்கு குருநாதர்கள் ஆகிறார்கள். எப்படி எருமை, பசு முதலியவற்றில் அதின் சரீரத்திலேயே பால், தயிர் முதலியவை தங்கி நிற்பினும் அவை அவற்றிற்கு புஷ்டியைத் தருவன ஆகாவோ, அவ்விதமே பிரத்தியகாத்மரூபமான பரமேஸ்வரன் ஒவ்வொருவரிடத்திலும் வசிப்பது வாஸ்தவமே ஆயினும், அதனால் ஸம்ஸார நிவிர்த்தி ஒவ்வொருவருக்குமுண்டாகா தன்றோ! எப்பொழுது விரக்தர்களும் பிரஹ்ம ஸாக்ஷாத்காரமடைந்தவர்களுமான பெரியோர்களின் ஸங்கமும் உபதேசமும் கிடைக்குமோ, அப்பொழுது தான் ஸம்ஸார நிவிர்த்தி கிடைக்கும். இந்தச் சுலோகத்திற்கு உரையாசிரியரின் சுலோகம் அடியில் வருமாறு:—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

சுலோகம் 3. जितद्वन्द्वदोषान्विरक्तान्नसक्तान्
महाधारणाध्यानयोगाधिरूढान्।
तरुं ब्रह्म जानन्ति ये तान्वरिष्ठान्
[illegible]

த்வந்த்வதோஷங்களை ஜெயித்தவர்களும், விரக்தர்களும், (இந்திரிய விஷயாதிகளில்) பற்றற்றவர்களும், மகா தாரணை, தியானம், யோகம் இவைகளில், மேற்படிகளில், சென்றவர்களும், தருவை பிரஹ்மம் என்றே அறிந்தவர்களும், மிக சிரேஷ்டர்களுமான, உதாஸீந ஸாதுக்களை யான் (மிகப்பணிவுடன்) நமஸ்கரிக்கின்றேன்.

த்வந்த்வ தோஷங்களாவன:—சீதம், உஷ்ணம், ராகம், த்வேஷம், பசி, தாகம், சோகம், மோகம் இவை ஆத்மாவினிடத்தில் ஆரோபிக்கப்படுவதால் துக்கத்தை விளைவிக்கின்றன ஆதலின் தோஷங்களெனக் கூறப்படும். இவற்றை விவேகத்தால் ஜெயித்தவர்களே ஸாதுக்களெனப்படுவர். பிரமாண வசனங்கள் சுருதி, ஸ்மிருதிகளில் பின் வருமாறு:—"ஞானத்தாலேயே கைவல்யம் அடையப்படுகின்றது, ஞானத்தாலன்றி முக்தி கிட்டாது, ஆத்மாவை

பட்டு பீதாம்பர கம்பெனி.

திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். } **ஸ்ரீ காசி** { பட்டு பீதாம்பரக் காட்லாக் இனுமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள் பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணு முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33உள்ளது, கண்டி 1க்கு ரூபா 1முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணு 10 முதல் ரூபா 10வரை. விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாக இருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 100-க்கு	...	...	3	0	0
2-வது நெம்பர் 100-க்கு	...	...	2	8	0
3-வது நெம்பர் 100-க்கு	...	...	0	6	0

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம், கரண்டிமுதல் 32 சாமான்கள் அடக்கிய அழகும் நேர்த்தியும் நைகம் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்கு ரூபா 2, பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

வெண்பட்டு வேஷ்டிகள்:—சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள், கோயம்புத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னக்கம்பி, ருத்திராக்ஷக்கம்பி ஜரிகைக் கம்பி போட்டவை.

முழம்.	அகலம்.	ரூ. முதல்.		வரை.
6	2½	7	,,	9
6	3	10	,,	12
7	2½	8	,,	12
7	3	10	,,	14
8	3	12	,,	81
9	3	14	,,	20
10	3	15	,,	22

விலாசம்: மானேஜர் பட்டுபீதாம்பர கம்பெனி, காசி

Benares City.

பெண் கல்வி.

சித்திர சகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

இப்பத்திரிகை ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்துவதற்காகவே தோன்றிய ஒன்றாகும். இதில் ஸ்திரீகள், தாய், மனைவி, சகோதரி, புத்திரி முதலிய பல நிலைகளில் செய்யவேண்டிய கடமைகளும் குடும்ப நிர்வாக சாஸ்திரம், வைத்தியவிஷயம், சுகாதாரவிஷயம் இவைகளைப்பற்றிய விஷயங்களும், ஒழுக்கம், குணம், கல்வி முதலியவற்றில் கீர்த்தியடைந்துள்ள தற்கால முற்கால மாதர்களின் சரித்திரங்களும் இனிய தமிழில் வெளியிடப்படும்.

இதற்கு விஷயங்கள் எழுதுபவர் முக்கியமாய் ஸ்திரீகளேயாவர்.

☞ இப்பத்திரிகை ஒவ்வொரு குடும்ப ஸ்திரீயும், வாத்திச்சிமார்களாகப் பயிற்சிபெறும் ஒவ்வொரு ஸ்திரீயும் படிக்கவேண்டியது அவசியம்.

வருஷசந்தா ரூ 2—8—0. தனிப்பிரதி 0-4-0. மாதிரிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணு லேபிலில் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

சகோதரி ரேவு தர்யாரம்மா, பத்திராதிபர், பெண்கல்வி, சென்னை.

பல கண்காட்சிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பராய், ஆயுர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேச பெருமாள்கோவில் சன்னிதி, தஞ்சாவூர்.

தயவு செய்து
இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்

—

பி சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

மகாத்துவஜம்:—இம்மருந்திற்கு ஒப்பான ஔஷதம் ஆயுர்வேதத்தைத் தவிர வேறெந்தவகை மருந்து சாஸ்திரத்திலேயும்கிடையாது. இம்மருந்தினால் தீராத வியாதியாவது குணமடையாத வியாதியாவது கிடையாது. அநேகவியாதிகளுக்கு இது கைகண்ட ஔஷதம். எக்காரணத்தினாலுண்டாகும் அசக்தமும், பலஹீனமும், மதுமூத்திரம், அதிமூத்திரம், மூத்திர அடைப்பு, பிரமேகம் முதலிய இன்னும் அநேக மூத்திர நோய்களும் எல்லாவித சுரங்களையும், ஜலுப்பு, இருமல், க்ஷயம், காசம், அஜீரணம், நீர்கோர்வை, பாண்டு, சோகை, காமாலை, மயக்கம், சித்தப்பிரமை, காலரு, பினைக் ஸ்திரீகள்கர்ப்பமாயிருக்கும்பொழுதும்,பிரசவித்தபின்னும் காணும் சகலரோய்களையும், நரம்புகளின் பலஹீனம் முதலிய இன்னும் அநேகவித வியாதிகளையும் குணமாக்கும். மூளையைப் பலப்படுத்தும் இம்மருந்து தங்கம் முதலியவைகள் சேர்த்துச் செய்யப்பட்டிருக்கின்றது. விலை தோலா 1-க்கு ரூபா 24. எழுவேளை ஔஷதம் ரூபா ஒன்று. வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

என்னுடைய அவுஷத சாலையின் ஹெட் ஆபீசை பரங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய் விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக் கோருகிறேன். பரங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.